Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
0212219510 (C/1675)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 02 சனிக்கிழமை (17.11.2012) பக்கங்கள் 20 ஓசை – 048
















# பணியாளர்களைப் பாதுகாக்க மீளாய்வு அறிக்கையில் தணிக்கை

## கூறுகிறது ஐ.நா.



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பணியாளர்களைப் பாதுகாக்க வும், சில இரகசிய ஆவணங்களைப் பாதுகாப்பதற்கவும், அறிக்கையின் சில பகுதிகளைத் தணிக்கை செய்ததாகவும், மீளாய்வு அறிக்கையின் சில பகுதிகள் தணிக்கை செய்யப்பட்டமையானது சரியான நடவடிக்கையே என ஐ.நா. அமைப்பின் உயரதிகாரி சுசனா மொல கொரா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஐ.நா.வின் செயற்பாடுகளை ஆராய்வதற்காக சாள்ஸ் பெற்றி தலைமையிலான குழு மேற்கொண்ட மீளாய்வு அறிக்கையில் ஐ.நா. தனது பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியுள்ளதாகத் தெரிவித்திருந்ததுடன், இதனைச் செயலாளர் பான் கீ மூனும் ஒப்புக கொண்டிருந்தார்.

ஐ.நா.வின் மீளாய்வு அறிக்கை வெளியிடப்பட்ட நிலையில், அந்த அறிக்கையில் சில பகுதிகள் தணிக்கை செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, சுசனா மெல கொரா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா ஆதரிக்கும்

ஐ.நா.வில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டுவந்தால் இந்தியா அதனை மீண்டும் ஆதரிக்கும் என இந்தியா தெரிவித்துள்ளது. சென்னை விமான நிலைய்யத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போது மத்திய இணையமைச்சர் நாராயண சாமி இதனைத் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியைச் சந்தித்தார் முல்யாணி இந்திரவதி

நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்றைய தினம் இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஸ்ரீ முல்யாணி இந்திரவதிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்றைய தினம் முக்கிய சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. உலக வங்கியின் பிரதிநிதிகளும், திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் 19 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் இவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். வருகிறார் ஜப்பானியத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ். வரும் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மெமிகிற்ருகோ பே வலிகாமம் வடக்கில் மீள்குடியேறிய மக்களுக்கான இரண்டாம் கட்ட வாழ்வாதார உதவித்திட்டங்களை வழங்கவுள்ளனர்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேறிய மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் முகமாக யாழ். சமூக மேம்பாட்டு மையம் ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் குடிநீர் வசதி மற்றும் இதர வாழ்வாதார உதவிகளை வழங்கிவருகின்றது. இதன் முதலாவது கட்ட வாழ்வாதார உதவித் திட்டக் கையளிப்பு நிகழ்வு கடந்த மாதம் நடைபெற்றிருந்தது.

அத்துடன் அதன் இரண்டாம் கட்ட வாழ்வாதார உதவித்திட்ட கையளிப்பு நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு வலி. தென்மேற்கில உள்ள மாதகல் வலித்தூண்டல் புனித அன்னம்மாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலேயே இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் கலந்து கொண்டு உரிய சமூக அமைப்புக்களிடம் வாழ்வாதார உதவித் திட்டங்களை கையளிக்கவுள்ளார.

சுமார் ஐந்து மில்லியன் ரூபா செலவில் இந்த வாழ்வாதார உதவித்திட்டங்கள் அமைந்துள்ளது. இதேவேளை இந்நிகழ்வில்

19 ஆம் பக்கம் பார்க்க

## பக்கச் சார்பற்ற விசாரணை வலியுறுத்தும் மன்னிப்புச் சபை

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தம் தொடர்பில் பக்கச் சார்பற்ற வகையில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஐக்கிய நாடுகள் சபை தொடர்பிலான விசேட அதிகாரி லுவிஸ் டயஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தில் ஐக்கிய நாடுகள் சபை தமது பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியுள்ளமையை, அதன் பொதுச் செயலாளர் பான் கீ மூன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்தே சர்வதேச மன்னிப்புச் சபை இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## தீவிரமடையும் டெங்கு நேற்று மட்டும் 7 பேர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று ஏழு பேர் டெங்கு நோய்த் தொற்றிற்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் தொற்று நோய் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். நல்லூர், நாவாந்துறை, பாசையூர், குருநகர், உரும்பிராய், சுழிபுரம் மற்றும் யாழ். பழைய பூங்காப் பகுதிகளில் இருந்து தலா ஒவ்வொருவராக ஏழு பேர் நேற்று வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

## பரிந்துரைகள் நடைமுறை; தடுத்து நிறுத்துமாறு வழக்கு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள பரிந்துரைகளை செயற்படுத்துவதை தடுத்து நிறுத்த உத்தரவிட வேண்டும் எனககோரி, சிங்கள ஜாதிக பெரமுன என்ற அமைப்பின் செயலாளர் ஜயந்த லியனகே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக 13 ஆவது அரசியல அமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என ஆணைக்குழு செய்த பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். 13 ஆவது அரசியல அமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அமைய அதிகாரத்தை பரவலாக்குவதற்கு எதிராக


19 ஆம் பக்கம் பார்க்க

## இ.போ.ச. ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

### பயணிகள் சிரமம்

இலங்கைப் போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலைப் பேருந்துகள் நேற்று வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபடாமையினால் பயணிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகினர். மாணவர்கள், உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை நோயாளிகள் எனப் பல தரப்பட்ட மக்களும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகினர். பருத்தித் துறை இ.போ.ச.வின் பருவகால சீட்டுக்களைப் பெற்றிருந்த மாணவர்கள் பலர் பணம் கொடுத்து

19 ஆம் பக்கம் பார்க்க



வடமாகாணத்தின் அபிவிருத்தி, மீள்குடியேற்றம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களுக்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை அடங்கிய "மோதலிலிருந்து உறுதிப்பாட்டுக்கு" எனும் தொகுதி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்றைய தினம் அலரிமாளிகையில் கையளிக்கப்பட்டது. மேற்படி செயலணியின் உறுப்பினர்களான அமைச்சர்கள் டக்ளஸ தேவானந்தா, பசில் ராஜபக்ஷ, றிஷாட் பதியுதீன் வட்மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, ஆகியோரால் இந்தத் தொகுதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.





**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2011/2012 (வெளிவாரி)**
**BaChelor of Business Management (Online) Degree Programme - 2011/2012**

## புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2011

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகினூடாக நடத்தப்படும் தமிழ் மொழி மூலமாக மூன்று வருட இணையவழி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கை நெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

☆ க.பொ.த (உ/த) பரீட்சை - 2010 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள் அல்லது

☆ பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

முக்கிய குறிப்பு:- இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்பொன்றுக்கான பதிவுசெய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப் படிவங்களைப் பெறுதல்:**

1. விண்ணப்பப் படிவத்தினை நேரடியாகப் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 250ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் மற்றும் வெளிவாரிப் பட்டப் படிப்புகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட ரூபா 250 இற்கான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையை சுயமுகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25X20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.
2. விண்ணப்பப் படிவத்தினை **www.jfn.ac.lk/bbm** எனும் இணைய முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பங்கள் யாவும் உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் **"இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு"** எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:** 28.12.2012

மேலதிக விபரங்களுக்கு 021 222 1106, 021 222 3610, 021 222 3612 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்புகொள்ளவும்.

**பதிவாளர்**
**12.11.2012**

(C/2152)

# BID NOTICE
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna will receive sealed bids from the qualified contactors for the following works.

| work/Service Details | Non- refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Repair of OPD Injection Room and Pediatrics Department Roof | 1000.00 | 15,000.00 | 1.3 | C9 |
| Repair of OPD Admission Section Roof | 1000.00 | 25,000.00 | 2.1 | C8 |

Bid forms may be obtain from Director. Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Office, Teaching Hospital, Jaffna till 22/11/2012.

Perfected bid should be sealed and mark with the and the name of the work on the top left corner of the envelop and send by registered post to reach the Director, Teaching Hospital, Jaffna or could be deposited in the bid box kept at Director Office, Teaching Hospital, Jaffna.

Bids will be accept till 10.00 am on 23/11/2012 and open immediately thereafter. Bidders or theirs accredited representatives could be present at the time of opening of bids.

Bids forms may be inspected by the bidders free of charge at the residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

Director (Chairman),
Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna.
16/11/2012.

(C/2154)

# ஊர்காவற்றுறை பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல் - 2013

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எல்லைக்குள் இருக்கும் மீன்சந்தை, மரக்கறிச்சந்தை, மாட்டு இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடை, சந்தை உட்புறக்கடைகள் என்பன 01.01,2013 தொடக்கம் 31.12.2013 வரை குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது.

☆ கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 19.11.2012 தொடக்கம் 29.11.2012 வரை
☆ கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி:- 30.11.2012 மு.ப. 10.00 மணிவரை
☆ கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 30.11.2012 மு.ப. 10.30 மணி

| இல | குத்தகை விபரம் | மாதாந்த வாடகை (VAT,NBT தவிர) | கேள்விப் பத்திரப் பணம் (VAT,NBT தவிர மீளளிக்கப்படாதது) | கேள்விப்பத்திரப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| 01 | ஊர்காவற்றுறை மீன் சந்தை (சைக்கிள் பாக் உட்பட) | - | 500.00 | 5000.00 | 300,000.00 |
| 02 | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக் கடை | 600.00 | 500.00 | 5000.00 | 330,000.00 |
| 03 | ஊர்காவற்றுறை கோழி இறைச்சிக் கடை | 600.00 | 500.00 | 5000.00 | 200,000.00 |
| 04 | ஊர்காவற்றுறை சந்தை உட்புறக் கடை (இல 01, 02) | 400.00 | 500.00 | 5000.00 | 110,000.00 |
| 05 | நாரந்தனை மீன் சந்தை | - | 500.00 | 1000.00 | 19,000.00 |
| 06 | நாரந்தனை மாட்டிறைச்சிக்கடை | 600.00 | 500.00 | 5000.00 | 220,000.00 |
| 07 | புளியங்கூடல் மீன் சந்தை | - | 500.00 | 1000.00 | 11,500.00 |
| 08 | புளியங்கூடல் மரக்கறிச் சந்தை | - | 500.00 | 1000.00 | 11,500.00 |

## நிபந்தனைகள்

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் முக்கியமாக தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. இறைச்சிக்கடைகளுக்கு சபையால் விதிக்கப்படும் மூன்று மாத வாடகை முற்பணம் கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
3. கேள்வித் தொகை, படிவக்கட்டணம், மாதவாடகை 'என்பவற்றுடன் 12% VAT, 2% NBT சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
4. வண்டித் தரிப்பிட நிலையத்திற்கு துவிச்சக்கர வண்டி ரூபா 5.00 மோட்டார் சைக்கிள் ரூபா 10.00 என்ற விகிதத்தில் கட்டணம் அறவிடப்படல் வேண்டும்.
5. சந்தை வளவில் உள்ள கடைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் குத்தகைக்காரர் எவ்வித வரி அறவீடுகளையும் மேற்கொள்ள முடியாது.
6. மாடுகள் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் அம்பலப்புலம் கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சிக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும்.
7. தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் 2012.12.07 ஆம் திகதிக்கு முன்னர் $^1/_2$ பகுதியை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும். மிகுதித் தொகையினை $^1/_8$ பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
8. கேள்விப்படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் குத்தகை விபரத்தினைக் குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை "தவிசாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, சுருவில் வீதி, ஊர்காவற்றுறை" என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
9. கேள்விகளைத் தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
10. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
11. மேலதிக விபரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது 021 321 2398 இலக்க தொலைபேசி மூலமாகவோ அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஊர்காவற்றுறை பிரதேச சபை,**
**சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.**
**17.11.2012**

**ம.ஜெயகாந்தன்**
**தவிசாளர்,**
**ஊர்காவற்றுறை பிரதேச சபை.**

(C/2153)

# ஐயன்குளம் கிராமத்தில் நோயாளர்கள் அவதி

(கிளிநொச்சி)

மல்லாவி - ஐயன்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் காலை முதல் மதியம் வரை ஒரு சிலவேளை மட்டும் நோயாளர்களுக்கான சிகிச்சைகள் இடம்பெறுவதால் ஏனைய நேரங்களில் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் பெரும் நெருக்கடிக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நேற்று வலிப்பு நோயால் அவதிப்பட்ட பெண் ஒருவர் இச்சிகிச்சை நிலையத்துக்கு வந்த சமயம் மருத்துவர் இல்லாது மல்லாவி வைத்திய சாலைக்கு அழைத்து சென்ற சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு ஒருவேளை மாத்திரம் சிகிச்சை இடம் பெறுவதால் ஏனைய நேரங்களில் அவசர சிகிச்சைக்காக இக்கிராம மக்கள் நீண்ட தூரத்திலுள்ள மல்லாவி பொது வைத்திய சாலைக்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக குழந்தைகளும், முதியவர்களுமே பாதிக்கப் படுவதாகத் தெரிவிக்கும் இக்கிராம மக்கள் சுகாதார நிலையத்தில் காலை முதல் மாலை வரை சிகிச்சைகள் இடம் பெற்றால் தாம் இலகுவாக இங்கேயே சிகிச்சை பெறமுடியும் எனத் தெரிவிக்கின்றனர்.

# மாதத்தில் நான்கு நாட்கள் கண் சிகிச்சை கிளினிக்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மாதத்தில் ஒரு நாள் நடைபெற்று வந்த கண் சிகிச்சை கிளினிக் வெகு விரைவில் மாதத்தில் நான்கு நாட்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மாதத்தில் ஒருநாள் நடைபெற்ற கிளினிக்கில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அடுத்தே கண் பரிசோதனைக்குரிய கருவிகள் பல இலட்சம் ரூபா செலவில் வரவழைக்கப்பட்டு பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகிறது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் துரித நடவடிக்கையின் பயனாக கருவிகள் வரவழைக்கப் பட்டுள்ளதாகவும் இக்கருவிகள் பொருத்தும் பணிகள் நிறைவுற்றதும் பிரதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் கண் சிகிச்சை கிளினிக் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. யாழ்.போதனா வைத்திய சாலை கண்சிகிச்சை வைத்திய நிபுணர்களால் கருவிகளின் துணைகொண்டு பரி சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

சாவக்சேரி ஆதார வைத்திய சாலையில் தென்மராட்சி பச்சிலைப்பள்ளி கிளிநொச்சி, வட்மராட்சி கிழக்கு போன்ற பிரதேசங்களிலல் இருந்து அதிகளவான மக்கள் பல்வேறு சிகிச்சைகளுக்கு இங்கு வருவது குறிப்பிடத்தக்கது.

(11)

# இயற்கை வலுவூட்டல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இயற்கை வலுவூட்டல் கழக ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் 19 ஆம் திகதி திங்கட் கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும் செயலமர்வில் பிரிவு ஒன்றைச் சேர்ந்த 15 பாடசாலை கழக ஆசிரியர்களுக்கும் (ஆரம்பப் பாடசாலைகள்) 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 ம்ணி முதல் 4 மணி வரை நடைபெறும் செயலமர்வில் பிரிவு இரண்டைச் சேர்ந்த 45 பாடசாலை கழக ஆசிரியர்களுக்கும் (புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்களுக்கும்) இடம்பெறவுள்ளது.

இச்செயலமர்வில் கொழும்பு பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியரும், இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத் தலைவரும் இலங்கை களப் பறவையியல் குழு சிரேஷ்ட காப்பாளருமான பேராசிரியர் சரத் கொடகம கருத்துரை வழங்கவுள்ளார்.

## சதுர்த்தி உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் இன்று இடம்பெறவுள்ளது.

கார்த்திகை மாத சதுர்த்தி விழா காலை 11மணிக்கு ஆரம்பமாகின்றது. சங்கற்பம், அபிசேகம்,வசந்தமண்டப பூசை நடைபெற்று விநாயகப் பெருமான் உள்வீதி உலா நடைபெறும். கலாநிதி கு.ஜெகதீஸ் வரக்குருக்கள் தலைமையில் இச் சதுர்த்தி உற்சவம் நடைபெறவுள்ளதோடு நிறைவில் மகேஸ்வர பூசை நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (இ)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் புதிய மின்மாற்றி நிறுவுவதற்காகவும்,

19 ஆம் திகதி திங்கட்கிழமை, 21 ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 23 ஆம் திகதி வெள்ளிக் கிழமை ஆகிய தினங்களில் 08.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் அளவெட்டி, மல்லாகம் ஒரு பகுதி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான், விளான், அம்பனை, கோண்டாவில் இருபாலை வீதி பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் கரந்தன், ஊரெழு, நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, சாமியன் அரசடி பிரதேசம், சம்மந்தர் கடைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும்.

21 ஆம் திகதி புதன்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் மந்திகை, கிராமக்கோடு, தம்பசிட்டி, ஓராம் கட்டை சந்தி, சாரையடி, புலோலி, பருத்தித்துறை நகரப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். என யாழ்.மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் பிரதேசங்களிலுள்ள மின்விநியோக மார்க்கங்களுக்கு இடையூறாகவுள்ள மரங்கள், மரக்கொப்புக்கள், தென்னை ஓலைகள், பனை ஓலைகள் என்பவற்றை வெட்டியகற்றி தடையற்ற மின்சார விநியோகத்தை பெற்றுக்கொள்ள மின்சார சபைக்கு உதவுமாறு பொதுமக்கள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

உடுவில் கல்விக்கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைச் சுன்னாகம் லயன்ஸ் கழகம் வருடாவருடம் கௌரவித்து வருகின்றது. அந்த வகையில் இந்தவருடம் அந்த நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு இணுவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் லயன் செ.மகாதேவாவின் அனுசரனையுடன் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் த.தேவராஜன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ்கழக முதலாவது உதவி மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்நித் பெர்னான்டோ, லயன் சீமாட்டி டில்கானி ரஞ்சித் பெர்னான்டோ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக்கல்விப் பணிப் பாளரும் ச.கந்தசாமி லயன்ஸ் கழக மாவட்ட திட்ட இணைப் பாளர் யாழ்.பல்கலைக்கழக வணிகபீடத் தலைவருமாகிய பேராசிரியர் லயன் க.தேவராஜா, ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவிருந்தினராக உடுவில் கல்விக்கோட்ட ஓய்வு நிலை உதவிக்கல்விப்பணிப் பாளர் செ.குபேரநாதன் கலந்து கொள்கிறார்.

விருந்தினர்களின் உரைகளைத் தொடர்ந்து மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறும். அத்துடன் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினரும் இணுவில் இந்துக்கல்லூரியின் அதிபருமாகிய லயன் மு.செல்வஸ்தான் சர்வதேச ஆசிரியர் தினத்தில் பிரதீபா பிரபா விருது பெற்று லயன்ஸ் கழகத்துக்குப்பெருமை சேர்ந்தார்.அவரையும் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# விண்ணப்பம் கோரல்

(வலிகாமம்)

மகரகமவில் அமைந்துள்ள தேசிய கல்வி நிறுவகத்தினால் 2 ஆம் மொழிகளான ஆங்கிலம், சிங்களம் முதலான கற்கை நெறிகளிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிக்கு ஆசிரியர்களும், அலுவலக உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம். இது தொடர்பான சுற்று நிருபம், வட பகுதியில் உள்ள 12 கல்வி வலயங்களிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டத்தின் இணைப்பாளர் கலாநிதி ச.தணிகாசலம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய கல்வி நிறுவகத்தின் பிராந்திய நிலையங்களிற்கூடாக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (06).

# பரிபாலனசபை பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்ட நிகழ்வில் இறைவணக்கம், பொதுச் சபையின் கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல், பொருளாளர் அறிக்கை சமர்ப்பித்தல், எதிர்வரும் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவுடன் ஏனைய பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன. அத்துடன் கல்வயல் கிராம சேவகர் திருமதி.எஸ்.உமா யோதினி சிறப்புரை ஆற்றவுள்ளார்.

நாளை நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் ஆலய பரிபாலன சபை அங்கத்தவர்கள் தமது அங்கத்துவ பணத்தினைச் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்வதோடு இக்கூட்டத்திற்கு அனைத்து அங்கத்தவர்களும், உபயகாரர்களும், நலன் விரும்பிகளும் கலந்து கொண்டு ஆலயத்தின் வளர்ச்சிக்கும் நிர்வாக கட்டமைப்புக்கும் உதவ வேண்டும் என்று செயலாளர் சி.கந்தசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 15 இற்கு மேற்பட்ட கணவனை இழந்த குடும்பத்தலைவிகளுக்கு வாழ்வாதார நிதியுதவி வழங்கப்பட்டது. வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவர் எஸ்.பாலகிருஸ்ணன் (ஜீவன்) குடும்பத்தலைவி ஒருவருக்கு நிதியுதவி வழங்குவதையும், இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர் செல்வக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டதையும் காணலாம்.

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நாம் வெறும் பண்டங்கள் அல்ல!

விஞ்ஞானத்தின் வளர்ச்சி, நவீன வசதிகளின் வளர்ச்சி, இயந்திரங்களின் வளர்ச்சி என்பன நமது வாழ்க்கையை இலகுபடுத்தியும் விரைவுபடுத்தியும் செல்வதாக ஒரு தோற்றம் இருக்கிறது. அன்றாட வேலைகளை இலகுவாக்கியதிலும், புதியன காணும் மகிழ்ச்சியிலும் நாம் நின்று யோசிக்க முடியாதவர்களாக புதிய புதிய கருவிகளின் கைப்பாவைகளாக தலைதெறிக்க விரைந்து கொண்டிருக்கிறோம்.

இந்தக் கருவிகளின், நவீன வசதிகளின், உற்பத்திப் பெருக்கங்களின் பின்னால் தொடர்ந்து வரும் ஆபத்துக்கள் ஒருபுறமிருக்க, நாம் இழந்துவரும் மனிதப் பண்புகளும் கவலையளிப்பதாக உள்ளது. முன்பெல்லாம் வயல்களில் அரிவி வெட்டி அவற்றைக் கட்டிச் சுமந்து வருகையில் வயலில் நெற்கதிர்கள் சிந்தும்; மாட்டு வண்டிலில் ஏற்றிச் செல்கையில் பாதையிலும் சிதறியபடியே வரும். அவையெல்லாம் பறவைகளுக்கும் குருவிகளுக்கும் பிராணிகளுக்கும் தேவை என்று விட்டு வருவார்கள். இன்று இயந்திரங்கள் வெட்டிப் பொதி செய்து ஒரு நெல்மணியும் சிந்தாது எடுத்துச் சென்றுவிடுகின்றன. பிற உயிர்கள் பற்றிய சிந்தனையும் தொலைந்துவிட்டது.

இந்த வளர்ச்சியில் மனிதர்களின் தனித்துவத்துக்கு மதிப்புக் கிடையாது. எங்கும் போட்டி, எதிலும் இலாபம் என்பதுதான் இதன் பார்வை. சந்தை தான் முக்கியம். எல்லாவற்றையும் விற்கவோ, வாங்கவோதான் முயலும். எந்த விழுமியங்களையும் ஏற்பதில்லை. இதன் பிடியில் எல்லாருமே பண்டங்களாகத்தான் இருக்கிறோம்.

எப்படி மனிதர்களுக்காக பொருட்களையும் பொருட்களுக்காக மனிதர்களையும் உருவாக்குகிறதோ அதேபோல நோய்களுக்காக மருந்துகளையும் மருந்துகளுக்காக நோய்களையும் உற்பத்தி செய்தபடியும் இருக்கிறது. ஒரு காலத்தில் மருத்துவம் மிக உன்னதமான சேவையாகக் கருதப்பட்டது. மருத்துவத்துக்கு ஈடாகப் பொருள் பெறுவதே பாவம் என்று நம்பிய காலம் இருந்தது. மந்திரத்தன்மை கொண்டதாகவும், இரகசியமாய் செய்ய வேண்டியதாகவும் கருதப்பட்டது. அந்த மருத்துவ இரகசியங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ளக்கூடாது. அப்படி பகிர்ந்து கொண்டால் அது பலிக்காது என்றும் நம்பப்பட்டது.

எல்லா நோய்களுக்கும் மருத்துவர்களைத் தேடிப்போவதில்லை. பெரும்பாலும் கை வைத்தியமாக வீடுகளில் குணமாக்கி விடுவார்கள். காய்ச்சல், சளி, தலைவலி, என்று அடிக்கடி வரக்கூடிய நோய்களுக்கு, உணவுப்பத்தியம், பச்சிலைச் சாறு, கஷாயம், சூரணம், சஞ்சீவி, கோரோசனை என்று கொடுத்துக் குணப்படுத்தி விடுவார்கள். உணவே மருந்து, மருந்தே உணவு என்று இயற்கையோடு இயைந்து வாழ்ந்த காலமாக இருந்தது.

இப்போது விதவிதமான மருந்துகளோடுதான் எல்லோரும் வாழ்கிறோம். மருந்துக் கடைகளும், ஆஸ்பத்திரிகளும் மக்கள் தொகைப் பெருக்க வேகத்தைவிட அதிக வேகமாகப் பெருகி வருகின்றன. நமக்குத் தரப்படும் மருந்துகள் அதன் விளைவுகள், பக்கவிளைவுகள், எல்லாவற்றைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டியிருக்கிறது.

பிரசவம் என்றாலே அது வயிற்றை வெட்டி எடுத்தல் (சிசேரியன்) தான் என்றாகி விட்டது. இது திட்டமிட்டு பணம் பறிப்பதற்கான செயலாகவும் மாறிவிட்டது. ஆஸ்பத்திரியில் அனுமதித்த உடனேயே பிரஷர் இருக்கிறது, அது இருக்கிறது என்று என்னென்னவோ பயமுறுத்த ஆரம்பித்து விடுகிறார்கள். வெட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்றே எல்லா பிரசவங்களும் போய்க் கொண்டிருக்கிறது. அதுபோன்றே எல்லா நோய்களுக்கும் உடலை மருந்துகளின் கிடங்காக்கி வருகிறோம்.

நாம் யோசிக்க வேண்டும். வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு வேறு வழிகளையும் சிந்திக்க வேண்டும். பண்டங்களாக நம்மை ஒப்புக்கொடுத்துக் கொண்டிருக்காமல் விழிப்படைய வேண்டும். - ஆசிரியர்

# பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வது பிற்போடப்பட்டுள்ளது

(கொழும்பு)

2011ஆம் ஆண்டு உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டவர்களை பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கை அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை பிற்போடப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் முன்னெடுக்கப்பட்ட பகிஷ்கரிப்பு காரணமாக மூன்று மாதங்கள் கல்வி நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை என அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார். இதன் காரணமாக, இறுதியாண்டு மாணவர்களின் பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளன.

இதற்கமைய, இந்தக் காலப் பகுதியில் இறுதியாண்டு மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேற வேண்டுமென அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரி-56 ரக துப்பாக்கியுடன் இரு திருடர்கள் கைது

(கொழும்பு)

கொஸ்வத்த பகுதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றை நேற்று அதிகாலை 4.35 அளவில் சோதனை செய்தவேளை, ரி-56 ரக துப்பாக்கியுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மோட்டார் சைக்கிளில் பின் ஆசனத்தில் அமர்ந்து சென்ற நபர்வசம் இருந்த பொதியொன்றைப் பிரித்துப் பார்த்தபோது அதில் ரி-56 ரக துப்பாக்கியும் 24 ரவைகளும் இருந்ததாக கொஸ்வத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

மாரவில, கொஸ்வத்த, வென்னப்புவ ஆகிய பகுதிகளில் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி பொது மக்களிடம் பணம் மற்றும் நகைகளை இவ்விருவரும் பறித்து வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

2012-10-28ஆம் திகதி மாரவில பகுதி வீடொன்றில் புகுந்து துப்பாக்கியைக் காட்டி மிரட்டி பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையிட்டு வீட்டில் இருந்த பெண்ணை வல்லுறவுக்கு உட்படுத்தியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

களவாடப்பட்ட ஒரு தொகை பணம் மற்றும் சில நகைகள் சந்தேகநபர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

கொஸ்வத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கஸகஸ்தானுக்கு விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கஸகஸ்தான் நாட்டுக்கு எதிர்வரும் வாரத்தில் விஜயம் மேற்கொள்வார் என ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு நாடுகளுக்கும் இடையிலான சுற்றுலாத்துறை உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதே இந்த விஜயத்தின் பிரதான நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கஸகஸ்தான் அரச அதிபர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இருப்பினும் ஜனாதிபதி அடுத்த வாரத்தில் எந்த திகதியில் கஸகஸ்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வார் என்பது பற்றிய தகவல்கள் அறிவிக்கப்படவில்லை.

இந்த வருடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கஸகஸ்தானுக்கு விஜயம் மேற்கொள்வது தொடர்பாக கஸகஸ்தான் குடியரசின் தூதுவர் டுலட் குவானிசெவ், இலங்கை வெளிநாட்டு அமைச்சர் காமினி லக்ஷ்மன் பீரிஸை கடந்த ஒக்ரோபர் மாதம் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

## மிலங்கா விலைச் சுட்டெண்ணை கைவிடத் தீர்மானம்

(கொழும்பு)

மிலங்கா விலைச்சுட்டெண்ணைக் கைவிடப் போவதாக கொழும்பு பங்குச்சந்தை அறிவித்துள்ளது. 2013 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து புதிய சுட்டெண்ணான S & P SL 20 அறிமுகம் செய்யப்படுவதால் மிலங்கா விலைச்சுட்டெண் கைவிடப்படுவதாக பங்குச்சந்தை குறிப்பிட்டது.

கொழும்பு பங்குச் சந்தையைப் பொறுத்தவரையில் இது முக்கியமான ஒரு முன்னேற்றமாகும். ஏனெனில், முன்னர் எம்மிடம் சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற ஒரு சுட்டெண் இருக்கவில்லை.

நாம் மிலங்கா விலைச் சுட்டெண்ணையும் தொடர்ந்து பேணி வந்தால் அது ஒரே வேலையை இருவர் செய்வது போலாகிவிடும் என கொழும்பு பங்குச் சந்தை தலைவர் கிறிஷான் பாலேந்திரா கூறினார்.

# மணல் பெறுவதில் சிரமம்; கிளி.யில் நிர்மாணப் பணிகள் மந்தம்

திருவையாறு கிராமத்தில் கோரமோட்டை ஆற்றில் சுமார் 40 உழவு இயந்திரங்கள் அரசாங்கத்தின் அனுமதிப்பத்திரம் பெற்று மண் அகழ்வில் ஈடுபட்டு வந்த நிலையில் கடந்த 5 மாதத்திற்கு மேலாக கிராம முன்னேற்றச் சங்கத்தின் கவனக்குறைவால் அனுமதிப் பத்திரம் பெற முடியாது போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் அனைத்து உழவு இயந்திரங்களும் சீரான முறையில் அனுமதி பெற்று மணல் அகழ்வில் ஈடுபட்டு வந்ததால் இலகுவாக மணலைப் பெறக் கூடியதாகக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது குறிப்பிட்ட சில உழவு இயந்திரங்கள் பொலிஸார் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஆதரவுடன் மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. வின்சன் வீதியில் இரவு வேளையில் குவிக்கப்படும் மணலை கனரக வாகனங்கள் ஏற்றிக்கொண்டு செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (45)

## உயர்தரப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு மந்தகதியில்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் மந்தகதியிலேயே இடம்பெற்று வருவதாக இலங்கை ஆசிரியர் சேவைகள் ஒன்றியத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னதாக விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை முடிவுறுத்த முடியும் என பெருமை பேசிக் கொள்ளாது, பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பதுளை, குருணாகல், கண்டி, கம்பஹா மற்றும் மாத்தறை போன்ற விடைத்தாள் திருத்தும் நிலையங்களில் காத்திரமான முறையில் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என தகவல்கள் கிடைத்துள்ளன. விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு போதியளவு கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை என்வும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 6

வே.அர்ச்சுணன்

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மூன்று பிரதிநிதிகளைக் கொண்ட குழு சீன நாட்டின் அழைப்பை ஏற்று கடந்த ஐந்தாம் திகதி சீனாவுக்குச் சென்றுள்ளது. இந்தக் குழுவில் தமிழரசுக்கட்சியின் ஊடகத் துறைக்குப் பொறுப்பான உதவிச் செயலாளரும் சிரேஷ்ட தமிழ் ஊகடவியலாளருமான ந.வித்தியாதரன், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின்



**வித்தியாதரன் போன்றோரை கைக்குள் போடுவதன் ஊடாக கூட்டமைப்பை உடைக்கமுடியும் என்ற நம்பிக்கை அரச உயர்பீடத்தினரிடம் உள்ளது. ஆனால் இலங்கை அரச உயர்பீடம் நேரடியாக பேரம்பேசினால் கூட்டமைப்பிலுள்ள ஏனையவர்கள் இவருடன் குழம்புவார்கள். அத்தோடு இலங்கையுடன் உடன்பட்டு அரசியல் செய்தால் கூட்டமைப்பில் நிலைத்து நிற்கமுடியாது என்பதையும் வித்தியாதரன் அறிவார். இதனால் சீனா போன்ற நாடுகளினூடாக இலங்கையினுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வைத்தால் இலங்கையினுடைய செல்லப்பிள்ளையாக இருந்தவாறு கூட்டமைப்பிலும் முக்கிய ஹீரோவாக இருப்பது சாத்தியம்.**

தலைவர் சோ.சுகிர்தன், கிழக்கு மாகாணசபைத் தேர்தலின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட சேயோன் ஆகியோர் சென்றுள்ளனர். அபிவிருத்தி வறுமை ஒழிப்பு ஆகியன தொடர்பான கொள்கை மற்றும் வழிமுறைகள் என்ற தலைப்பில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு ஏற்பாடு செய்துள்ள பல்வேறு அரசியல் கலந்துரையாடல்களில் இந்தக் குழுவினர் 15ஆம் திகதி வரை பங்கு பற்றுவர் எனவும் இக் காலகட்டத்தில் பல்வேறு முக்கிய சந்திப்புக்களை நடத்துவர் எனவும் கூறப்பட்டுள்ளது.

அண்மையில் சீனத் தூதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொழும்பில் சந்தித்து பேச்சை நடத்தியபோது இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. உண்மையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் சீன அரசாங்கம் பேச்சு நடத்தவேண்டுமாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சுவார்த்தைக் குழுவைத்தான் அழைத்திருக்க வேண்டும். அந்த பேச்சுவார்த்தைக் குழுவில் ஆனந்த சங்கரி, சித்தார்த்தன் தவிர்ந்த ஏனைய பிரதிநிதிகள் கட்டாயம் உள்வாங்கப்பட்டிருப்பர். ஆனால் சீனத் தூதுவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு வருமாறு அழைத்தபோது சம்பந்தன் உடன்பட்டதுடன் மட்டும் நிற்காமல் இப்பேச்சுவார்த்தைக்கு அல்லது அரசியல் கலந்துரையாடலுக்கு தமிழரசுக்கட்சியை சேர்ந்தவர்களையே அனுப்புவதென உடனடியாகவே முடிவெடுத்துவிட்டார்.

கூட்டமைப்பின் ஏனைய பிரதிநிதிகளுக்கு தெரியப்படுத்தாமல் தனக்குள்ளேயே முடிவெடுத்த சம்பந்தன், குறித்த மூவரின் பெயரையும் சீனத் தூதுவரிடம் இரவு இடம்பெற்ற தொலைபேசி உரையாடலில் தெரியப்படுத்தி இருந்தார். இதனை அடுத்தே குறித்த மூவரும் சீனாவிற்கு அனுப்பப்பட்டுள்ளனர். உண்மையில் இந்த ஏற்பாடானது மறைமுகமாக அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டதான ஒரு ஏற்பாடாகவே கூறப்படுகிறது. ஏனெனில் தற்போது இந்தியாவுடனும், அமெரிக்காவுடனும் தொடர்புகளைப் பேணிவரும் கூட்டமைப்பின் போக்குகளை நன்றாக உணர்ந்துள்ள அரசாங்கம் கூட்டமைப்பின் இத்தகைய போக்குகளால் தங்களிற்கு ஆபத்து அல்லது அழுத்தங்கள் உருவாகலாம் என அவதானிக்கிறது. இதன் அடிப்படையில் இந்தப் போக்கை மாற்றவேண்டுமானால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பொறியில் சிக்கவைக்க வேண்டுமென அரச தரப்பு கணக்குப்போட்டது.

குறிப்பாக இலங்கை அரசுமீது இந்தியாவும், அமெரிக்காவும் கோபம் கொள்வதற்கு பிரதான காரணம் இலங்கை சீனாவுடனும் நெருக்கமான இராஜதந்திர உறவுகளை வளர்த்துக்கொள்வதே ஆகும். சீனாவுடன் இலங்கை பாதுகாப்புத் தொடர்பான ஒப்பந்தங்களிலும் கையெழுத்து இட்டுள்ளது. இத்தகைய நிலைமையானது அமெரிக்க - இந்திய அரசுகள் இலங்கைமீது கோபம் கொள்வதற்கு வழி ஏற்படுத்தியுள்ளது. தற்போது கூட சீனாவும் இலங்கையும் பாதுகாப்பு ஒத்துழைப்பை கட்டியெழுப்புவதற்கும் இரு நாட்டு இராணுவ உறவினை உறுதிசெய்து ஒத்துழைப்பை அதிகரித்து நட்புறவைப் பேணுவதற்கும் தீர்மானித்துள்ளதுடன், இரண்டு நாட்டின் பாதுகாப்பு அமைச்சர்களும் சீனாவில் தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர். சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் லியாங் கௌங் லிக்கும் இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உள்ளிட்ட மேல்மட்டக் குழுவினருக்குமிடையே பீஜிங்கில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த நட்புறவு ஒப்பந்தமும் உருவானது.

சீனாவில் நடைபெறுகின்ற9ஆவது சர்வதேச விமான மற்றும் விண்வெளிக் கண்காட்சியில் கலந்து கொள்வதற்காகவே பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சீனாவுக்குச் சென்றிருந்தார். சீனாவின் தெற்கு நகரமான ஹயில் நடைபெற்ற இக் கண்காட்சியில் ஏராளமான நவீன போர்த்தளபாடங்கள், மற்றும் புதிய தாக்குதல் ஹெலிகொப்டர்கள் உள்ளிட்ட பல முக்கிய உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இக் கண்காட்சியும் பாதுகாப்பு ஒப்பந்தமும் இந்தியாவையும், அமெரிக்காவையும் கடும் சீற்றமடைய வைத்துள்ள போதிலும், இலங்கை அரசின் காய்நகர்த்தல்களுக்கு அமைவாக கூட்டமைப்பு தூதுக்குழுவினர் சீனாவில் இரகசிய சந்திப்புக்களை மேற்கொள்வதும் அமெரிக்காவையும், இந்தியாவையும் எரிச்சலடையவே வைத்துள்ளது. அமெரிக்காவும், இந்தியாவும் கூட்டமைப்புடன் இணைந்து தங்களது பிராந்திய நலன்களை முன் நிறுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க முயன்றுவரும் இந்தச்சூழலில், இலங்கை அரசம் சீனாவும் இணைந்து கூட்டமைப்பை தமது பொறிக்குள் விழுத்தியுள்ளன.

இதில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. ஒன்று கூட்டமைப்புக்குள் இப்பயணத்தின் மூலம் வலுவான உடைவு ஒன்று உருவாகும் நிலைமை தோன்றிவருவது. ஏனெனில் கூட்டமைப்புக்குள் ஏற்கனவே பிளவுகள் ஆரம்பித்துள்ள சூழ்நிலையில், சீனச் சுற்றுப்பயணத்திற்கு தம்மை அனுப்பவில்லையென்று சுரேசும், செல்வமும் நிச்சயமாக குழம்புவார்கள். இதனைவிட தமிழரசுக்கட்சியை முதன்மைப்படுத்தி வித்தியாதரனை அனுப்பியமையையும் இவர்கள் கடுமையாக எதிர்ப்பார்கள். ஏனெனில் புலிகளின் அழிவிற்கு ஏதோ ஒரு விதத்தில் துணைநின்ற வித்தியாதரன் கூட்டமைப்பின் அழிவிற்கும் வழி கோலுவார் என்ற அச்சம் இவர்களிடம் வலுவாகவே உள்ளது.

சீனா சென்ற வித்தியாதரன் குறித்த நிகழ்ச்சிநிரல்களுடன் மட்டும் நிற்காமல் தன்னுடன் கூடச்சென்றவர்களைத் தனிப்படுத்திவிட்டு, இவர் சீன இராணுவ அதிகாரிகளையும் அவர்களது புலனாய்வுத் துறையினரையும் இரகசியமாகச் சந்திக்கவே செய்வார். கடந்த காலத்தில் வித்தியாதரன் இலங்கை அரசு, இந்திய அதிகாரிகள் மற்றும் விடுதலைப் புலிகளுடனும் ஒரேசமயத்தில் கொண்டிருந்த உறவுகளையும் புலனாய்வுப் பிரிவுகளுடனான அவரது 'நிதி' உறவுகளையும் அறிந்தவர்களுக்கு இதுவியப்பாக இராது. வித்தியின் அணுகுமுறை சீன அதிகாரிகளுக்கும் நிச்சயம் உவப்பாகவே அமையும். பல பரிமாற்றங்களை முடித்துக்கொண்டே குழு திரும்பிவரும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது.

புலிகளுடன் அரசாங்கம் ஜெனிவா, தாய்லாந்து போன்ற இடங்களில் பேச்சுவார்த்தை நடத்தியகாலப் பகுதிகளில் பேச்சுவார்த்தைக்கு செல்கின்ற தமிழ் ஊடகவியலாளர்கள் மற்றும் சிங்கள ஊடகவியலாளர்கள் பலர் அங்குள்ள உல்லாச விடுதிகளுக்குச் சென்றுவரத் தவறியதில்லை. அக்கால கட்டத்தில் இலங்கை ரூபாவில் பெருமளவு தொகை இதற்கெனவே செலவானதாகப் பேச்சு இருந்தது. குறிப்பாக இந்த விடயத்திற்காக அப்போது தமிழ்ச்செல்வன் வித்தியாதரனையும் இன்னும் ஒரு ஊடகவியலாளரையும் கடுமையாகச் சினந்துகொண்டதாகச் சொல்லப்பட்டது. தற்போது சீனாவிலும், உல்லாச விடயங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே அரசு - புலிகள் பேச்சுவார்த்தைக் காலத்தை நினைவுபடுத்தி ஊடகவியலாளர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

வித்தியாதரன் போன்றோரை கைக்குள் போடுவதன் ஊடாக கூட்டமைப்பை உடைக்கமுடியும் என்ற நம்பிக்கை அரச உயர்பீடத்தினரிடம் உள்ளது. ஆனால் இலங்கை அரச உயர்பீடம் நேரடியாக பேரம்பேசினால் கூட்டமைப்பிலுள்ள ஏனையவர்கள் இவருடன் குழம்புவார்கள். அத்தோடு இலங்கையுடன் உடன்பட்டு அரசியல் செய்தால் கூட்டமைப்பில் நிலைத்து நிற்கமுடியாது என்பதையும் வித்தியாதரன் அறிவார். இதனால் சீனா போன்ற நாடுகளினூடாக இலங்கையினுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வைத்தால், இலங்கையினுடைய செல்லப்பிள்ளையாக இருந்தவாறு கூட்டமைப்பிலும் முக்கிய ஹீரோவாக இருப்பது சாத்தியம். கூட்டமைப்பை ஒரு கட்டத்தில் ஒழித்துவிட்டு தமிழரசுக்கட்சியைப் பலப்படுத்தவும் முடியுமென எண்ணலாம்.

தமிழரசுக்கட்சிக்கும் அல்லது கூட்டமைப்பிற்கும் வித்தியாதரனிற்கும் ஆரம்பத்தில் எந்தவொரு தொடர்புகளுமே இருந்ததில்லை. புலிகளின் அழிவிற்குப் பின்னர் தமிழரசுக்கட்சியின் அல்லது கூட்டமைப்பின் தலைமையை கைப்பற்ற வேண்டும் என்ற ஆசை வித்தியாதரனுக்கும் வந்ததில் வியப்பில்லை. மைத்துனரான சரவணபவன் கூட்டமைப்பிலுள்ளவர்களை வெட்டி ஓடக்கூடிய திறமையின்றி தனியே பணம் சம்பாதிக்கும் குறியுடன் மட்டும் நிற்பதால், அவரால் எதையுமே சாதிக்க முடியாது என்பதை உணர்ந்துள்ள வித்தியாதரன், சரவணபவனுடன் தனக்குத் தொடர்பு கிடையாதெனவும் உதயன் பத்திரிகையிலிருந்து தான் விலகிவிட்டதாகவும் பலரையும் நம்பவைத்துள்ளார். கூட்டமைப்புக்குள் தமிழரசுக்கட்சியின் முக்கிய பிரமுகர் போன்று கால்பதித்து தற்போது சம்பந்தனின் நம்பிக்கைக்குரிய ஒருவராக சீனா-வரை சென்றுள்ளார்.

ஜனாதிபதிக்கும், சம்பந்தனிற்கும் இடையில் இடம் பெற்ற தொலைபேசி உரையாடல் ஒன்றின்போது அமெரிக்காவுடனும் இந்தியாவுடனும் நாங்கள் உறவுகளை வைத்தாலும் உங்களுக்கு எதிராக நாங்கள் செல்லமாட்டோம் என சம்பந்தன் வாக்குறுதி அளித்திருந்தார் எனச் சொல்லப்படுகிறது. இதன்போது நீங்கள் சீனாவிற்கு செல்லவேண்டும் அதற்குரிய ஏற்பாடுகளை நான் செய்துதருகிறேன் என ஜனாதிபதி கோரியிருந்தார். இதற்கு உடன்பட்ட சம்பந்தன், முதலில் சீனக்குழுவை தாங்கள் இலங்கையில் சந்திப்பதாகவும் அதன்பின்னர் சீனாவிற்கு கூட்டமைப்பு செல்லுமென்றும் கூறியிருந்தார். அதன் பிரகாரமே வித்தியாதரன் குழுவினர் சீனா செல்வதற்கு சம்பந்தன் ஏற்பாடுகளை செய்திருந்தார்.

ஆனால் சம்பந்தன் நம்புகின்ற அளவிற்கு வித்தியாதரன் நம்பிக்கைக்கு உரியவராக செயற்படப்போவதில்லை. அண்டைநாட்டின் புலனாய்வுத் துறையுடன் இணைந்து புலிகளுக்கே ஆப்பு வைத்தவருக்கு, சம்பந்தன் எம்மாத்திரம் என்றே அவரது வரலாற்றை அறிந்தவர்கள் சொல்கிறார்கள். கூட்டமைப்பை உடைக்கவும் அவர் கோதாவில் இறங்கிவிட்டார் என்பதையே சீன விஜயம் வெளிப்படையாக உணர்த்துவதாக அவர்கள் ஆதாரப்படுத்துகிறார்கள்.

வித்தியாதரனின் தில்லுமுல்லுகள் ஒரு புறத்தில் இருக்க, விடுதலைப் புலிகளை ஊடகங்கள் எவ்வாறு அழித்தன என்பதை நாங்கள் தொடர்ந்து பார்க்கலாம்..

(தொடரும்)

# இலங்கையில் உள்ள அனைவரும் உலகத்திற்கு வழிகாட்டக் கூடியவர்கள்



(கொழும்பு)

பயங்கரவாதத்தைத் தோற்கடித்து உலகிற்கு வழங்கிய முன்மாதிரியை, சூழலைப் பாதுகாப்பதன் ஊடாகவும் வழங்குவதற்கு அணிதிரளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய மரநடுகை தினத்தை முன்னிட்டு நாட்டில் 11 இலட்சம் மரக்கன்றுகளை நடும் திட்டத்திற்கு அமைவாக தியவன்னா ஓயாவிற்கு அருகிலுள்ள பூங்காவில் நேற்று முன்தினம் முற்பகல் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முழு உலகத்திற்கும் வழிகாட்டக்கூடிய தூரநோக்கு இலங்கையர்களுக்கு இருக்கின்றது.

மரக்கன்று ஒன்றை நட்டு அதனைப் பாதுகாப்பது, பிறந்த மண்ணுக்காக நிறைவேற்றுகின்ற பொறுப்பாகும்.

நாட்டிலுள்ள மொத்த வனப்பரப்பை 23 வீதத்தில் இருந்து 35 வீதமாக உயர்த்துவதற்கு இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# இரண்டு நிறுவனங்களால் 8 இலட்சம் கருக்கலைப்புக்கள்



இரண்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் கடந்த 26 ஆண்டுகளில் சுமார் 8, 81, 077 கருக்கலைப்புக்களை மேற்கொண்டுள்ளதாக பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலபொட்டஅத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இதில் 877,963 கருக்கலைப்புச் சம்பவங்கள் உபகரணங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏனைய கருக்கலைப்புச் சம்பவங்கள் மாத்திரைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த இரண்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் சிங்களப் பெண்களுக்கு குடும்பக் கட்டுப்பாட்டு சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றன.

சில வைத்தியர்கள், குடும்பநல உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு இந்த முயற்சிக்காக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இரண்டு அரச சார்பற்ற நிறுவனங்களிடம் 800 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் காணப்படுகின்றது.

அவற்றை அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கலபொட்டஅத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

# தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு புதிய நிர்வாகக் குழு தெரிவு

(கொழும்பு)

தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி தேசிய கல்வி ஆணைக்குழுவின் புதிய தலைவராக பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய செயலாளராக சந்ரரத்ன பல்லேகம நியமிக்கப்பட்டுள்ளார். பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர், கோத்தாபய ஜயரத்ன, கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன, கலாநிதி காமினி சமரநாயக்க உள்ளிட்ட சிலர் உறுப்பினர்களாக பெயரிடப்பட்டுள்ளனர்.

# அதிகளவு குழந்தைகள் பெறுமாறு மேர்வின் சில்வா ஆலோசனை

(கொழும்பு)

சிங்களப் பெண்களிடம் அதிகளவான குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பொது மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எனது உறவினர்கள் மற்றும் நண்பர்களான சிங்களப் பெண்களிடம் இந்தக் கோரிக்கையை நான் விடுத்துள்ளேன். கூடுதலான பிள்ளைகளைப் பெற்றெடுக்குமாறு நான் கோரியுள்ளேன்.

மேலும், எனது மகனுக்கும் லம்போகினி கார் வாங்கிக் கொடுப்பேன். எனது மகன் லம்போகினி காரை விரும்பினால் அதனை நான் வாங்கிக் கொடுப்பேன்.

கிரிக்கெட் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுக்களுக்கு சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஏன் மோட்டார் கார் பந்தயக்காரர்களுக்கு சலுகைகளை வழங்க முடியாது.

பந்தயக் கார்கள் மட்டுமன்றி, பந்தய விமானங்களைச் செலுத்தக் கூடியவர்கள் இருந்தால் அவர்களுக்கும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

இந்த வரவு செலவுத் திட்டம் பல்வேறு நலன்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

நானும் பந்தயக் கார் செலுத்துவேன். என்னுடன் எவரேனும் மோத விரும்பினால் மோதலாம் என அமைச்சர் மேர்வின் சில்வா பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

# சிறைச்சாலை அனுபவமுடையவரே ஆணையாளராக வரமுடியும்

(கொழும்பு)

சிறைச்சாலை தொடர்பான அனுபவங்கள் உடையவ ஒருவரை சிறைச்சாலை ஆணையாளராக நியமிக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது. தற்போதைய சிறைச்சாலைகள் ஆணையாளர் பி.டபிள்யூ. கொடிப்பிலிக்கு அனுபவம் கிடையாது என தெரிவித்துள்ளது.

சிறைச்சாலை நிர்வாகம் தொடர்பில் அனுபவம்மிக்க ஒருவரே ஆணையாளர் பதவிக்கு பொருத்தமானவர் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொடிப்பிலி ஓய்வு பெற்ற சிவில் நிர்வாக அதிகாரி எனவும் அவருக்கு சிறைச்சாலை நிர்வாகம் பற்றிய அனுபவம் கிடையாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்தியா போன்ற நாடுகளிடமிருந்து இலங்கை பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்பினால் கௌரவிக்கப்பட்ட கிரன் பேடி, இந்திய சிறைச்சாலை ஆணையாளராக கடமையாற்றி வருகின்றார்.

# தெரிவுக்குழு முன் சமுகமளிக்குமாறு பிரதம நீதியரசருக்கு அழைப்பு

(கொழும்பு)

குற்றப்பிரேரணை தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன் எதிர்வரும் 23ஆம் திகதி சமுகமளிக்குமாறு பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்காவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிராக 14 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஆளும் ஐக்கிய சுதந்திர கூட்டமைப்பைச் சேர்ந்த 117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட குற்றப் பிரேரணை மீதான விசாரணை எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த குற்றப் பிரேரணையை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள 11 பேரடங்கிய நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தலைமை வகிக்கின்றார்.

இந்நிலையில், 23ஆம் திகதி தெரிவுக்குழுவின் முன் ஆஜராகும் பிரதம நீதியரசர், அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு பதில் தாக்கல் செய்வதற்காக கால அவகாசம் கோரலாம் என்று மேற்படி தெரிவுக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கலவரம் ஏற்பட வாய்ப்பு

(கொழும்பு)

டிசெம்பர் முதலாம் திகதி வரை பொறுமையுடன் செயற்படாவிடின் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஐக்கிய தேசியக் கட்சியினுள் கலவரத்தை எதிர்நோக்க வேண்டியேற்படும். தவறான கொள்கைகளினால் ஐக்கிய தேசியக் கட்சி 24ஆவது தடவையாகவும் மக்களை தோல்விக்கு இட்டுச்சென்றதாக ஆளுங் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் தவறானவை. அவற்றை மாற்றி அமைத்து புதிய கொள்கைத் திட்டம் ஒன்றை உருவாக்குங்கள்.

எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி வரை அவர் பொறுமையாக செயற்படாவிடின் கட்சிக்குள் கலவரம் ஏற்படும். அதனால் கட்சிக்குள்ளேயே ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிரான நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வங்கியில் வைப்பிலிட்ட பணம் அபகரிக்கப்பட்டதாக வழக்கு

வங்கியில் வைப்பிலிட்ட 17,724 அமெரிக்க டொலர்களை வங்கியொன்று அபகரித்துவிட்டது என பெண்ணொருவர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

ஷிரானி அனோமா துலாவ என்ற மேற்படி பெண், கொள்ளுப்பிட்டியிலுள்ள அரச வங்கியொன்றில் கடந்த 1998ஆம் ஆண்டு ஜுன் மாதம். 25ஆம் திகதி, வதிவோர் வெளிநாட்டு கணக்கில் 17,724 அமெரிக்க டொலர்களை வைப்பு செய்ததாகவும், தான் அந்தப் பணத்தை மீளப்பெறச் சென்ற வேளையில் அந்தப் பணம் மீளப்பெறப்பட்டு விட்டதாக கூறப்பட்டதாகவும் கூறினார்.

இது தொடர்பில் தான் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததாகவும் அப்பெண் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி வங்கியின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர், முறைப்பாட்டாளர் வங்கிலிருந்து பெற்ற கடனை திருப்பி செலுத்தாதபடியால் அவரது கணக்கிலிருந்து கடன் பணம் கழிக்கப்பட்டதாக கூறினார்.

இருப்பினும் தான் கடன் ஏதும் பெறவில்லை என குறித்த பெண் கூறினார். இதனையடுத்து, இந்த வழக்கு விசாரணையை டிசெம்பர் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்க நீதவான் உத்தரவிட்டார்.

# தெற்கு நெடுஞ்சாலையில் பொழுதுபோக்கு நிலையங்கள்



தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வழியே வெலிப்பனையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உணவகங்கள், மருத்துவக் குளியலகங்கள் மற்றும் சிறுவர் பூங்காக்கள் என்பன இன்னும் சில வாரங்களில் பொதுமக்கள் பாவனைக்காக திறக்கப்படவுள்ள.

இவற்றுக்கு மேலாக எரிபொருள் நிலையங்கள், ஆடை விற்பனை நிலையங்கள், வாகன தரிப்பிடங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் என்பவையும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவை, இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் உப நிறுவனங்களான சிறிலங்கா இன்சுவரன்ஸ் றிசோட்ஸ் மற்றும் "ஸ்பாஸ் லிமிட்டெட்" என்பவற்றால் முகாமைத்துவம் செய்யப்படவுள்ளன.

இதேவிதமாக, மாக்கும்புர நகரத்தையும் அபிவிருத்தி செய்யும் திட்டங்களும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், அங்கு இன்னும் கூடுதலான வசதிகள் இருக்கும் என்றும் இந்தத் திட்டங்களுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பாக இருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

# பாடசாலைக்குள் நுழைந்து சிறுமியை கடத்த முயற்சி

பாடசாலை ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்து சிறுமி ஒருவரை கடத்த முயற்சித்த இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மீரிகம - முத்தரகம கனிஷ்ட வித்தியாலயத்தில் அத்துமீறி நுழைந்து அங்கு முதலாம் தரத்தில் கல்வி பயிலும் 5 வயதுடைய சிறுமியை கடத்த இருவர் முயற்சித்துள்ளனர்.

இதன்போது சிறுமியை கடத்த பயன்படுத்திய லொறியையும் இரு சந்தேகநபர்களையும் பிரதேச மக்கள் மடக்கிப்பிடித்து மீரிகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபர்கள் மொரட்டுவ மற்றும் பண்டாரகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் நேற்று அத்தனகல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர்.

# சிவப்பு மழைக்கான காரணம் குறித்து ஆய்வு


(கொழும்பு)

செவனகல மற்றும் மன்னம்பிட்டி பகுதிகளில் பெய்த சிவப்பு மழை தொடர்பில் மருத்துவ ஆய்வு நிறுவனம் ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது.

ஆய்வுகளுக்கான நீர் மாதிரிகளை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் டாக்டர் அனில் சமரநாயக்க தெரிவித்துள்ளார். இதன் காரணமாக சுகாதார ரீதியிலான பிரச்சினைகள் ஏற்படும் நிலைமை எதுவும் ஏற்படவில்லை.

மன்னம்பிட்டி - செவனகல பகுதியில் பெய்த இந்த சிவப்பு மழைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என அவர் குறிப்பிட்டார். இந்தியாவின் கேரளா மாநிலத்திலும் அண்மையில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டதாகவும் அதனால் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பயனாளிகளின் தெரிவில் பாரபட்சம் காட்டக்கூடாது



(யாழ்ப்பாணம்)


வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வழங்கப்படுகின்ற உதவிகளை சரியானவகையில் பயன்படுத்தி தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் கரவெட்டி பிரதேச செயலக பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் வடமராட்சி கால்நடை வைத்திய அலுவலர் அலுவலகத்தில் நடைபெற்றபோது நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த கால யுத்தத்தினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியான நிலையிலுள்ள மக்களதும், வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் வழங்கப்படுகின்ற உதவிகளைச் சரியான வகையில் பயன்படுத்தி, தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

பயனாளிகள் தெரிவின் போது பாரபட்சமற்ற முறையில் சரியான பயனாளிகளைத் தெரிவு செய்வது குறித்த உத்தியோகத்தர்களின் கடமையாகும். எனவே இச்சமூகப் பொறுப்பை நன்குணர்ந்தவர்களாகச் செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். தொடர்ந்து பயனாளிகளுக்கான கோழிக்குஞ்சுகளை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன், ஈ.பி.டி.பியின் கரவெட்டி பிரதேச இணைப்பாளர் செந்தில்நாதன் பிரதேச செயலர் சிவசிறி ஆகியோர் வழங்கி வைத்தனர். இதன் போது தெரிவு செய்யப்பட்ட 36 பயனாளிகளுக்கு தலா 10 கோழிக்குஞ்சுகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



யாழ்.ஒஸ்மானியாக்கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முபாரக்கிடம் கலைஞர் கலைச் செல்வன் ஒரு தொகுதி கலை, இலக்கிய நூல்களை அன்பளிப்பாக வழங்குவதைக் காணலாம். (105)


## வீதித்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் திங்கட்கிழமை நல்லூர் கோவிலில் இடம் பெறும் சூரசங்காரம் நிகழ்வை முன்னிட்டு ஆலயச்சூழலினூடான வாகனப் போக்குவரத்து அன்றைய் தினம் 2.00 மணி முதல் 7.00 மணி வரையும் தடை செய்யப்படவுள்ளது.

வாகன உரிமையாளர்கள் மாற்றுவழிப்பாதையைப் பயன்படுத்தி ஆலயச்சூழலில் அமைதியைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## பரமர் சங்கமம்



"வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும், ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும்" என்ற கூற்று நடைமுறைச் சாத்தியமானது தான்.

நடைமுறைச் சாத்தியம் இல்லாத எத்தனையோ விசயங்களை இந்தக் காலங்களில் பரவலாகக் காணமுடிகிறது.

இதனைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே ஆரூடகமாகச் சொல்லிப்போந்தனர் நம் முன்னோர். அதிலும் காலங்களைப் பலவாறாகப் பிரித்து இந்த இந்தக் காலங்களில் இதுகளெல்லாம் நடைபெறுமெனத் தெரிவித்தும் இருக்கின்றார்களல்லவா?

அதனிலும் கலிகாலமெண்டால் அதற்கு இந்த மாதிரியான நடைமுறைச் சாத்தியம் இல்லாத புதுமைச் சம்பவங்களுக்கு விதிவிலக்கே இருக்காது.

என்ன பரமர் பீடிகையை வளர்த்துக் கொண்டே போகிறாரென்று யோசிப்பீர்கள். பூனைக் குட்டிக்கு நாய்பால் கொடுத்து வளர்ப்பதும், கீரியும் பாம்பும் ஒரே தொழுவத்தில் வளர்க்கப்படுவதும் உண்மை என்பது போல தான் இதுவும் ஒன்று.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி இளைய தளபதியின் 'துப்பாக்கி' திரைச் சித்திரம் உலகெங்கும் திரையிடப்படும் சங்கதியை நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமெண்ட அவசியம் இல்லை.

ஆனால் இது மில்லேனியத்தையும் கடந்த புதுமை ஒன்று தான். கைத் தொலைபேசி நண்பர்களின் உலகளாவிய புகழைக் கொண்ட ஏயார்ரெல் நிறுவனம் 'துப்பாக்கி' படத்திற்கு விளம்பர அனுசரணை செய்து தன்னை விளம்பரப் படுத்த எடுத்துக் கொண்ட முயற்சியைத் தான் சொல்கிறேன்.

அந்தத் துண்டுப்பிரசுரத்தைப் பார்த்து ஆருக்கு ஆர் இந்த விளம்பத்தை வெளியிட்டார்களென்று சிறிதே அதிர்ந்துதான் போனேன்.

சாட்சாத் 'துப்பாக்கி' சினிமாவுக்கு விளம்பர அனுசரணை செய்வதன் மூலம் ஏயார்ரெல் தன்னை மக்கள் மயப்படுத்த எடுத்துக் கொண்ட முயற்சி பட்டவர்த்தனமாகத் தெரிகிறது.

இரண்டும் மக்களை இரண்டு வகையில் சுரண்டி ஏப்பம் விடுகின்ற தொழில் துறைகள். ஆயினும் அவற்றால் மக்களுக்கு நன்மை ஏற்படப் போவதில்லை என்பதல்ல நோக்கம்.

பயன் பாட்டுக்கும் அதிகமாகப் பாவனையாளர்களை 'லாகிரி' வசப்படுத்தும் போதை வஸ்துப் பொருட்களுக்கும் இவற்றுக்கும் பெரிய தூரமில்லை.

அத்தகைய மக்களை அந்தப்படியே விழுங்குகின்ற இரு வகைத் தொழில்துறைகளும் ஒன்றுக்கு ஒன்று விளம்பரம் செய்ய ஒன்றிணைந்து இருப்பது கலியுக புதுமையாகவே படுகிறது.

ஆச்சரியங்கள் இன்னும் இந்த இருபத்தோரம் நூற்றாண்டில் தோன்றத்தான் போகிறது. தோன்றினால் அவற்றையும் வண்டியும் ஒரு நாள் ஓரிடத்தில் ஏறும் ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும் என்ற நிலை தோன்றினால் ஆர் தடுப்பது. என்ன சொல்லுறியள்... ■

## சூரன்போர்

சந்திரபுரம் - அம்பலந்துறை வேம்படி கந்தனின் கந்த சஷ்டி விழா தற்போது விமரிசையாக நடைபெற்று வருகிறது. சஷ்டியின் இறுதி நாளான நாளை சூரன்போர் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் சஷ்டி பூசை வழிபாடுகள் வழமைபோல நாளை இடம்பெறுவதோடு மாலை 3 மணிக்கு சூரபத்மன் திக்கு விஜயம் இடம்பெற்று சூரன்போர் ஆலய வீதியில் இடம்பெறவுள்ளது. (இ)

## சொற்பொழிவு

யாழ்.சின்மயா மிஷன் நடாத்தும் 'கந்தபுராணத்தில் வாழ்வியல் தத்துவங்கள்' என்னும் தலைப்பில் யாழ்.சின்மயா மிஷன் ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சொற்பொழிவாற்றி வருகின்றார.

நல்லூர் முருகன் ஆலய வடக்கு வீதியில் உள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் மாலை 3.00 மணி முதல் 4.00 மணி வரை இச்சொற்பொழிவு நடைபெற்றுவருகிறது.

## முரசின் இன்றைய பலன்

(17.11.2012 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 02 ஆம் திகதி. நட்சத்திரம் மூலம் முற்பகல் 9.19 வரை. சித்தயோகம். திதி சதுர்த்தி முன்னிரவு 7.23 வரை.
இராகுகாலம் 9.08 - 10.38 வரை. சுபநேரம் 3.08 - 4.38 வரை.
எமகண்டம் 1.38 - 3.08 வரை, குளிகன் காலம் 6.08 - 7.38 வரை.
சதுர்த்தி விரதம், ஸ்கந்த ஷஷ்டி விரத 04 ஆவது நாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தர்மசங்கடமான சூழ்நிலை வரலாம். பொறுமை அவசியம். தொழில் வளர்ச்சி. உழைப்புக்கேற்ற பணவரவு. புத்திரர்க்கு ஆலோசனை. |
| ரிஷபம் | உற்சாகம், செயல்களில் புதுமை. அனுகூலத்தீர்வு. தொழில் முன்னேற்றம். ஆதாய பணவரவு. தேடிய பொருள், வந்து சேரும். அரச உதவி. |
| மிதுனம் | திட்டமிட்ட செயற்பாடு. சூழ்நிலை தொந்தரவு. இழப்பும் நஷ்டமும் இருக்கும். நண்பர் உதவுவர். பயணத்தில் கவனம். வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். |
| கடகம் | செயல்களில் நேர்த்தி. திறமையை நண்பர், உறவினர் பாராட்டுவர். தொழில், போட்டி குறையும். உபரி வருமானம். பொன் பொருள் சேர்க்கை. |
| சிம்மம் | செயற்திறமை கண்டு பிறர் பொறாமை. உதவும் குணம. தொழில் இடையூறு இருக்கும். குறைந்த பணவரவு. பாதுகாப்பு கவனம். எதிர்பாராத செலவு. |
| கன்னி | செயல்களில் குழப்பம். தகுதிக்கு மீறிய வாக்குறுதி தரக்கூடாது. தொழிலில் குறுக்கீடு வந்து பின்னர் சரியாகும். பண நெருக்கடி இருக்கும். |
| துலாம் | அறிமுகம் இல்லாதவர்களிடம் எச்சரிக்கை. புதிய முயற்சிகள் தொடங்குவீர்கள். தொழில் மந்தம். சிக்கனம் நல்லது. பெற்றோர் உடல்நலம் கவனம். |
| விருச்சிகம் | சுறுசுறுப்பு. பணித்திறன் நன்மைகளைத் தரும். பணவரவு முன்னேற்றம். சுபநிகழ்ச்சி அழைப்பு வரும். பலநாள் விருப்பம் நிறைவேறும். |
| தனுசு | மனதில் நம்பிக்கை. தொடங்குகிற செயல் வெற்றி. தொழில், இலக்கு நிறைவேறும். நண்பரிடம் உதவி கிடைக்கும். உடல் நலம் பலம்பெறும். |
| மகரம் | சிலர் பரிகாசம் செய்வர். பொறுமையுடன் விலகுதல் நன்மை. கூடுதல் பணிச்சுமை. அளவான பணவரவு. வாகன கவனம். புது முயற்சிகள் வேண்டாம். |
| கும்பம் | தியாக மனதுடன் செயற்படுவீர்கள். உதவியும் நட்பும். கூடுதல் உழைப்பு, தொழில் முன்னேற்றம். உபரி வருமானம். சொத்து வாங்க திட்டம். |
| மீனம் | முக்கிய நபருடன் சந்திப்பு. அவரது ஆலோசனையால் புத்துணர்வு. தொழில், புதிய பரிமாணம். தாராள பணவரவு. வீடு, வாகன திருத்தம். |

# அழுத்தம் இல்லை

(சிட்னி)

அண்மைக்காலமாகப் பெருமளவு ஓட்டங்களைக் குவித்திருக்காத போதிலும் நான் அழுத்தங்களுக்குள்ளாகியிருக்கவில்லை என அவுஸ்ரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் டேவிட் வோனர் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது போட்டிக்குச் செல்வதற்கு முன்னர் நான் அழுதத்தங்களெவற்றையும் எதிர்கொண்டிருக்கவில்லை. அத்தோடு போட்டிகளைத் தொடர்ந்து வெல்லும் வரை, உலகின் முதல்நிலை அணிக்கான பயணம் சிறப்பாகத் தொடரும் வரை அவையே முக்கியமானது.


நான் புத்துணர்வுடன் உள்ளேன். மீண்டும் சிறப்பாகச் செயற்படத் தயாராகிவிட்டேன். முதலாவது போட்டியில் சக வீரர்கள் ஓட்டங்களைக் குவிக்கும் போது அவற்றை மைதானத்திற்கு வெளியேயிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். தற்போது எனது வாய்ப்புக்காகக் காத்திருக்கின்றேன்.

இரண்டாவது போட்டிக்கு முன்னதாக மீண்டும் சிறப்பாகத் தயாராவேன். என்னால் முடிந்தளவு மிகச் சிறப்பாகத் தயாராவேன் எனவும் அவர் தெரிவித்தார்.



இங்கிலாந்து அணிக்கு எதிரான அகமதாபாத் டெஸ்ட் போட்டியைக் கண்டு மகிழ்ந்த இந்திய அணி வீரர் புஜாராவின் காதலி பூஜாவைக் காணலாம்.

# புஜாரா இரட்டைச் சதம்; இந்தியா பலம்
# திணறுகிறது இங்கிலாந்து



(அகமதாபாத்)

புஜாராவின் இரட்டைச் சதத்தின் மூலம் இங்கிலாந்து அணிக்கெதிரான அகமதாபாத் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி அகமதாபாத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி புஜாராவின் இரட்டைச் சதத் துணையுடன் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இந்திய அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 521 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் புஜாரா ஆட்டமிழக்காது 389 பந்துகளை எதிர்கொண்டு 21 பவுண்டரிகள் அடங்கலாக 206 ஓட்டங்கபைப் பெற்றார். மற்றும் சேவாக் 117, யுவராஜ் 74, கம்பீர் 45 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்வான் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடும் இங்கிலாந்து அணி, அஸ்வின், ஓஜா ஆகியோரின் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறி வருகின்றது. நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இங்கிலாந்து அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் இங்கிலாந்து அணித் தலைவர் குக் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். பந்து வீச்சில் அஸ்வின் இரண்டு, ஓஜா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இங்கிலாந்து அணி ஏழு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலை யில் 480 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# 2ஆவது டெஸ்டில் வட்சன்?

(சிட்னி)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரர் வட்சன் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் உபாதை காரணமாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்காத வட்சன், இரண்டாவது போட்டிக்கான 13 பேர் கொண்ட குழாமில் சேர்க்கப்பட்டுள்ள போதிலும், அவரது உடற்தகுதியை அவர் நிரூபித்தால் மாத்திரமே அவர் விளையாடும் பதினொருவர் அணியில் சேர்க்கப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வட்சனுக்கு ஏற்பட்ட கால் உபாதையிலிருந்து அவர் தொடர்ந்தும் முன்னேறி வருகிறார் எனத் தெரிவித்த பிரதம தேர்வாளர் ஜோன் இன்வெராரிற்றி, ஆனால் விளையாடும் பதினொருவர் அணிக்கான தேர்வில் கருத்திற் கொள்ளப்படுமளவிற்கு அவர் முழுமையான உடற்தகுதியை அடைந்து விடுவாரா என்பதை உறுதி செய்ய முடியாதுள்ளதாகத் தெரிவித்தார்.

முதலாவது போட்டியில் அவுஸ்ரேலிய அணி வெளிப்படுத்திய திறமை குறித்து தேசிய தேர்வாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவித்த அவர், முதலாவது நாளில் போதியளவு திறமைகளை வெளிப்படுத்தாத போதிலும் அதிலிருந்து மீண்டு வந்தமை மகிழ்ச்சிக்குரியது எனத் தெரிவித்தார்.

# முதல் டெஸ்ட் இன்று

(காலி)

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் இன்றைய தினம் காலியில் ஆரம்பமாகின்றது.

ஏற்கனவே, நடைபெற்ற ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை நியூசிலாந்து அணி இழந்த நிலையில் டெஸ்ட் போட்டித் தொடரில் திறமைகளை வெளிப்படுத்தி இலங்கை அணிக்கு நெருக்கடி கொடுப்போம் என அவ்வணியின் கப்டன் ரெய்லர் தெரிவித்தார். ஒரு நாள் போட்டித் தொடரின் போது சிறு தவறுகளை தாம் செய்ததாகவும், முக்கியமாக கால நிலை சீரின்மையே தமது தோல்விக்கு முக்கிய காரணம் எனவும், டெஸ்ட் தொடரில் இவற்றைச் சரிசெய்து இலங்கை அணிக்கு நெருக்கடி கொடுப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

# உமர் அக்மல் நீக்கம்



(லாகூர்)

பாகிஸ்தான் அணியின் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர் உமர் அக்மல் அவரது உள்ளூர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். மோசமான ஆட்டத் திறன் காரணமாகவே அவர் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் சுய் வடக்கு பைப் லைன்ஸ் நிறுவனத்தின் அணியிலிருந்தே உமர் அக்மல் நீக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தானின் முதற்தரப் போட்டித்தொடரொன்றிலிருந்தே உமர் அக்மல் நீக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட அணியின் பிரதான வீரராகக் காணப்படும் உமர் அக்மல், பாகிஸ்தானின் டெஸ்ட் அணியில் இன்னமும் நிரந்தரமான இடத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையிலேயே அவர் உள்ளூர் அணியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவ்வணியின் பயிற்றுவிப்பாளர் பசித் அலி, உமர் அக்மலின் மோசமான ஆட்டத் திறன் காரணமாகவே அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்தோடு முதற்தரப் போட்டிகளில் எவ்வாறு விளையாடுவது என்பதை உமர் அக்மல் கற்றுக்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்த பயிற்றுவிப்பாளர், முதற்தரப் போட்டி களில் விளையாட வேண்டுமானால் உமர் அக்மல் தனது துடுப்பாட்ட நுட்பங்களைச் சீர்செய்துகொள்ளவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை வருத்தமளிப்பதாகத் தெரிவித்த உமர் அக்மல், இத்தொடரில்பங்குபற்றுவதற்கு ஆர்வமாகக் காணப்பட்டதாகவும், இந்நிலையில் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை வருத்தமளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு எதிர்பார்த்ததை விட அதிகளவில் சாதிக்க முடியாமல் போனது ஏமாற்றமே. எனினும் அடுத்த ஆண்டு சிறந்த ஆண்டாக அமையும் என எதிர்பார்க்கின்றேன். பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு எனது பங்களிப்பு இருக்கவேண்டும் என்பதுதான் எனது இலக்காக உள்ளது. முடிந்த வரைகளத்தில் நின்று வெற்றிக்கு உழைக்க வேண்டும். அடுத்த ஆண்டு நிச்சயம் நான் நினைத்தது நடக்கும் என எதிர்பார்க்கின்றேன் எனவும் தெரிவித்தார்.

# சதம் அடித்ததில் மகிழ்ச்சி



(அகமதாபாத்)

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் சதம் அடித்தது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. மக்களுக்கு என் திறமை மீது சந்தேகம் இருந்திருக்கலாம். எனக்கு எனது திறமை மீது எந்த சந்தேகமும் கிடையாது என இந்திய அணியின் அதிரடி வீரர் சேவாக். தெரிவித்தார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான. முதலாவது டெஸ்ட் போட்டியில் சதம் அடித்ததன் பின் னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக் கையிலேயே சேவாக் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது வீடியோ ஆய்வாளருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனது கடந்த கால இன்னிங்ஸ் ஆட்டங்களை இரவு 11 மணி வரை பார்த்தோம். முதல் 10 ஓவர்கள் எச்சரிக்கையுடன் ஆடிய ஆட்டங்களில் நான் சதம் கண்டு இருப்பதை வீடியோவை பார்த்துப் புரிந்து கொண்டேன். அதேபோல் செயற்பட்டே சதம் அடித்தேன.

2 ஆண்டுகளுக்குப்பிறகு சதம் அடித்தது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. மக்களுக்கு என் திறமை மீது சந்தேகம் இருந்திருக்கலாம். எனக்கு எனது திறமை மீது எந்த சந்தேகமும் கிடையாது.

கம்பீர் சிறப்பாக ஆடினார். இதனால் எங்களால் சிறப்பான தொடக்கம் கொடுக்க முடிந்தது. புஜாராவும் நன்றாக ஆடினார். பந்தை அடித்து ஆடுவது கடினமாக இருக்கிறது. எமது பந்து வீச்சாளர்கள் சிறப்பாகப் பந்து வீசி இங்கிலாந்தின் 20 விக்கெட்டுகளை வீழ்த்துவார்கள் என நம்புகின்றேன். போட்டியை வெல்ல முயற்சிப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

# அமைச்சர் பணிப்புரை

(கொழும்பு)

பிரித்தானிய ஊடகவியலாளர் எட் ஹோக்கின்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட நூல் ஒன்றில் இலங்கைகிரிக்கெட் வீரர்கள், முன்கூட்டியே ஆட்டங்களை நிர்ணயித்தனர் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் இது தொடர்பில், இலங்கை கிரிக்கெட் சபை விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்ட நிர்ணயம் தொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்திகள் குறித்து தமக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும் படி அமைச்சர், அமைச்சின் செயலாளர் ஷர்சா பி அபயகோனுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

எப்படியிருப்பினும், பிரித்தானிய ஊடகவிய லாளர் எட் ஹோக்கின்சினால் வெளியிடப்பட்ட நூல், தனிப்பட்ட ஒருவரின் கருத்து என இலங்கை கிரிக்கெட் சபையின் தலைமை நிறைவேற்று அதிகாரி அஜித் ஜயசேகர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மே.தீவுகள் 215 ஓட்டங்களால் முன்னிலை

(டாக்கா)

பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 215



ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. பங்களாதேஷ், மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் டாக்காவில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 556 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நயீன் இஸ்லாம் 108, நசீர் உசைன் 96, சகிப் அல் ஹஷன் 89, தமீம் இக்பால் 72 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ராம்போல், சுனில் நரைன் தலா மூன்று, டரன் சமி இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

28 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி வரும் மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்றைய ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, ஆறு விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் பவள் 110 ஓட்டங்களைப் பெற்றார். முதல் இனிங்ஸிலும் பவள் சதமடித்தமை குறிப்பிடத்தக்கது. மற்றும் பிராவோ 76 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சகிப் அல் ஹஷன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இன்று போட்டியின் இறுதி நாள் என்பதால் இப்போட்டி வெற்றி தோல்வியற்ற முடிவை நோக்கிப் பயணிக்கும் என பெரும்பாலும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் இனிங்ஸ் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 523 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சண்டிலிப்பாய் கோட்ட கால்பந்து ஹென்றியரசர் கல்லூரி சம்பியன்



(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் கோட்ட கால்பந்தாட்டத் தொடரின் 14 வயதுப் பிரிவிற்கான போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி சம்பியனானது.

சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டித் தொடரின் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியும், மூன்றாமிடத்திற்கான போட்டியும் கடந்த 14ஆம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும், மாதகல் சென். ஜோசப் வித்தியாலய அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று அடிக்கடி ஆடுவதால் பலம், பலவீனம் என்பன குறித்து அதிகம் அறிந்திருந்தமையால் இப்போட்டி பெரும் எதிர்பார்ப்பிற்கு உள்ளாகியது. இருப்பினும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி வீரர்கள் புதிய உத்வேகத்துடன் களமிறங்கினர். ஆட்டம் தொடங்கி ஐந்தாவது நிமிடத்தில் ஹென்றியரசர் கல்லூரியின் முன்கள வீரர் அன்ரனி ராஜ் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் கோல் ஒன்றைப் போட்டுக் கொள்ளும் முனைப்புடன் மாதகல் சென். ஜோசப் வித்தியாலய வீரர்கள் அதிக பிரயத்தனத்தை மேற்கொண்டதை காண முடிந்தது. இருப்பினும் ஹென்றியரசர் கல்லூரியின் பிற்கள வீரர்களின் சிறப்பான தடுப்பணையைத் தாண்டி சென் ஜோசப் கல்லூரி அணி வீரர்களால் உட்செல்ல முடியவில்லை. இந்நிலையில் முன்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

தொடர்ந்து பிற்பாதி ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்தில் ஹென்றியசர் கல்லூரி வீரர் கில்மன் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து இரு அணி வீரர்களும் கோல் போடும் முயற்சியை மேற்கொண்டபோதும் அது இறுதி வரை பலனளிக்கவில்லை. இறுதியில் இளவாலை ஹென்றியசர் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கோட்ட மட்ட சம்பியனானது.

இப்போட்டி நிகழ்வில் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பணிப்பாளர் சி. சிவானந்தராசா, மானிப்பாய் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் ஜெயதர்ஷன் லோரன்ஸ், வலிகாமம கல்வி வலய உடற்கல்வி உத விக் கல்விப் பணிப்பாளர் நடராஜா மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (93)

## கோப்பாய் பிரதேச மட்ட கரப்பந்தாட்டப் போட்டி

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பங்குகொள்ளவுள்ள அணிகளைக் குறித்த நேரத்திற்கு வருகைதந்து போட்டிகள் சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் கி. மனோகரன் கேட்டுள்ளார். (93)

## யாழ். மாவட்ட அணி கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

மாவட்டங்களுக்கிடையில்ான கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாண மாவட்ட அணி கொழும்பு செல்கின்றது.


இலங்கையின் இருபத்தைந்து மாவட்டங்களின், 21 வயதுப்பிரிவுஅணியினருக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டிகள் இம்மாதம் 22ஆம் திகதியிலிருந்து கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாண மாவட்ட அணி எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பு செல்லவுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட அணிக்கு பயற்சியாளராக பா.முகுந்தன், அணியுடன் செல்கின்றார்.

இதேவேளை, மாகாண மட்டப் போட்டியில் மன்னார் அணியை வீழ்த்தி யாழ். மாவட்ட அணி சம்பியன பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

## மைதானம் திறப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ். இராணுவப் படைத்தலைமையகத்தின் நிதிப்பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட பாஷையூர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் வலைப்பந்தாட்டத்திடல் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் 51ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி சந்தன குணவர்த்தன பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வலைபந்தாட்டத்திடலை திறந்துவைத்தார்.

# கரம் விளையாட்டில் தங்கப் பதக்கம் வென்ற வீரருக்குப் பணப் பரிசு



(கொழும்பு)

உலக கரம் போட்டியில் உலகின் சிறந்த கரம் விளையாட்டு வீரராகத் தெரிவாகி தங்கப்பதக்கம் பெற்ற நிஷாந்த பெர்னாண்டோவுக்கு விளையாட்டு அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே 10 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

அமைச்சரின் விசேட கோரிக்கையின் பேரில் வெளிநாட்டு தொழில் மேம்பாட்டு அமைச்சர் டிலான் பெரேரா நிஷாந்த பெர்னாண்டோவுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் தொழில் ஒன்றையும் பெற்றுக்கொடுக்க உள்ளார். தங்கப் பதக்கத்தை உலக மட்டத்தில் இலங்கை வென்ற முதலாவது முறை இதுவென இலங்கை கரம் சம்மேளனத்தின் தலைவர் லெங்க்லி மதாயாப் தெரிவித்தார்.

உலக கரம் போட்டியில் இலங்கை இம்முறை 01 தங்கப்பதக்கத்தையும், 03 வெள்ளிப்பதக்கங்களையும், 02 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுள்ளது. கரம் ஆட்ட வீரர்கள் வீராங்கனைகள், பயிற்றுவிப்பவர்கள் ஆகியோருக்கு அரச கௌரவத்தை வழங்குவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பு ஒன்றையும் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே ஏற்பாடு செய்துள்ளார். இச் சந்திப்பு அடுத்த வாரத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, தற்போது கிரிக்கெட்டைத் தவிர்த்து ஏனைய போட்டிகளிலும் இலங்கை சாதித்து வருவது மகிழ்ச்சி. நாம் எந்தவொரு விளையாட்டாக இருந்தாலும் அதற்கு ஊக்குவிப்பு வழங்குவோம்.

அதில் வீர,வீராங்கனைகள் தங்களை முழுமையாக அர்ப்பணித்து சாதித்தால் நிச்சயம் அனைவரையும் நாம் கௌரவிப்போம். அவர்களுக்குரிய மதிப்பளிப்போம். அந்த வகையில் கரம் போட்டியில் இலங்கை தேசத்தை சர்வதேசமட்டத்திற்குகொண்டு சென்ற நிஷாந்த பெர்னாண்டோவுக்கு எமது வாழ்த்துக்கள். அவர் தொடர்ந்தும் திறமைகளை வெளிப்படுத்தி இலங்கை தேசத்திற்கு புகழ் தேடித் தருவார் என நாம் நம்புகின்றோம்.

எதிர்காலத்தில் நிஷாந்த போன்ற வீரர்கள் உருவாகவேண்டும். உருவாக்கப்படுவார்கள்என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதற்கான சகலநடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம். வீர,வீராங் கனைகளின் ஒத்துழைப்பே எங்களுக்கு அவசியம் எனத் தெரிவித்தார்.



அம்னெஸ்டி இண்டெர்நேஷனல் அமைப்பின் இந்தியத் தலைமை இயக்குநர் அனந்தபத்மநாபன் பேட்டியிலிருந்து....

# இலங்கையை குறைகூற இந்தியாவால் முடியாது!

இந்தியா இலங்கைக்கு உளவுத் தகவல்கள் கொடுத்ததற்கு ஆதாரம் இல்லை. ஆயுத உதவியைப் பொறுத்தவரை இறையாண்மை உள்ள ஒரு நாடு இறையாண்மை உள்ள மற்றொரு நாட்டுக்கு ஆயுதங்கள் அளிப்பது சர்வதேசச் சட்டத்தின்படி ஏற்கத்தக்கதுதான்.

போர்க்குற்றங்களை விசாரிக்குமாறு இலங்கைக்கு நேரடியாக இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும். ஐ.நா. வழியாகவும் செய்யலாம். ஆனாலும் இந்தியா இதைச் செய்யாமல் இருப்பதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. இலங்கையோடு இந்தியாவுக்கு இராஜதந்திர உறவு உள்ளது. தவிரவும், இலங்கையை நிர்ப்பந்திப்பது தனது வர்த்தக நலன்களுக்கு எதிராகத் திரும்பும் என்றும் இந்தியா நினைக்கிறது.

மேலும், இலங்கையில் தீவிரவாத எதிர்ப்புச் சட்டத்தைத் தவறாகப் பிரயோகிக்கிறார்கள் என்று இந்தியாவால் குறைகூற முடியாது. காரணம். நம்முடைய armed forces special powers act அப்படிப்பட்ட ஒரு சட்டம்தான். ஜம்மு-காஷ்மீரில் அடையாளம் காணமுடியாத 5,000 சவக்குழிகள் உள்ளதை அந்த மாநில மனித உரிமை கவுன்சிலே உறுதிப்படுத்தியுள்ளது. அவ்வளவு ஏன், காவல் நிலையங்களில் சித்திரவதை என்பது எல்லோருக்கும் தெரிந்ததாகவே இருக்கிறது. இந்நிலையில் இலங்கையின் மனித உரிமை மீறல் குறித்து இந்தியா பேசுவது என்பது கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறிவதற்குச் சமமானது.

இத்தனைக்கும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் மிகவும் முற்போக்கானது. 1948இல் சர்வதேச மனித உரிமைக் காப்பகம் உருவாக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து நம் அரசியல் அமைப்புச் சட்டம் உருவானது. அம்பேத்கர் போன்ற ஒரு சட்ட மேதையால், ஒடுக்குமுறையை நேரடியாக உணர்ந்த ஒருவரால் உருவாக்கப்பட்ட சட்ட வடிவம் அது. இந்தியாவில் வசிப்பவர்களுக்கு மட்டுமல்ல, பிற இடங்களில் வசிக்கும் இந்தியர்களுக்கும் இந்திய அரசு கடமைப்பட்டுள்ளது. இருந்தும் இந்தியாவால் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியவில்லை.

மனித உரிமைகளை எடுத்துக்கொண்டால் இந்திய அரசு மீது இந்தியப் பிரஜைகளாலேயே பல குற்றச்சாட்டுகளை முன்வைக்கமுடியும்.

தனி நபராக இருந்தாலும் சரி, போராளிக் குழுக்களாக இருந்தாலும் சரி, அரசாங்கமாக இருந்தாலும் சரி, மனித உரிமை மீறல்களில் யார் ஈடுபட்டாலும் அவர்களை அம்னெஸ்டி ஒன்றுபோலவே அணுகுகிறது.

இந்தியாவில் காஷ்மீர் போன்ற பகுதிகளில் நாங்கள் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருகிறோம். காஷ்மீரில் public safety act என்றொரு பிரிவு இருக்கிறது. விசாரணை இல்லாமல், எந்த ஆதாரத்தையும் காட்டாமல் 16 வயதுக்கு மேற்பட்ட எவரையும் 2 ஆண்டுகள் சிறையில் அடைத்து வைக்கலாம் என்கிறது இந்தச் சட்டம். எங்களுடைய தலையீட்டால் இந்த விதியில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டது, 16 வயது என்பது 18 வயதாகவும் 2 வருடங்கள் என்பது 3 மாதங்கள்ாகவும் மாற்றப்பட்டன. காஷ்மீரைப் பொறுத்தவரை அவர்களுக்குப் பாதுகாப்பும் தேவை, உரிமைகளும் தேவை. அதற்காக நாங்கள் தொடர்ந்து பிரசாரம் செய்வோம்.

மத்திய இந்தியாவை எடுத்துக்கொண்டால், வளங்களைக் கையாளும் விஷயத்தில் பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. பழங்குடிகளை விரட்டிவிட்டோ அவர்களை ஏமாற்றியோ அவர்கள் பகுதியில் உள்ள வளங்களைப் பயன்படுத்தக்கூடாது. சர்வதேச விதிகளின்படி, பழங்குடிகளிடமிருந்து சுதந்திரமான, முன்கூட்டிய, தகவல்களை நன்கு அறிந்த அனுமதி (free, prior, informed consenz) கிடைக்கவேண்டும். இன்று inclusive வளர்ச்சி குறித்து அனைவரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதன் பொருள் உன் வளங்களை எடுத்துக்கொண்டு நான் முதலில் வளர்கிறேன் பிறகு என்னாலான உதவிகளை உனக்குச் செய்கிறேன் என்று சொல்வதல்ல. அவர்களை ஒருங்கிணைத்து, அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, அவர்களுடன் கைகோர்த்து வளரவேண்டும் என்பதுதான்.

இவை போக, நாடு முழுவதும் இலட்சக்கணக்கானவர்கள் விசாரணையின்றிச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். 6 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டிய ஒருவர் 4 ஆண்டுகளாக விசாரணையின்றிச்சிறையில் இருக்கிறார். இன்னும் பலருக்கு பெயில் கிடைத்திருக்கும். ஆனால் நீதிமன்றக் கட்டணமோ பெயில் பணமோ கட்டமுடியாததால் (ஒரு சில ஆயிரம் ரூபாய்தான் இருக்கும்!) தொடர்ந்து சிறையில் இருக்கிறார்கள். பெண்கள், குழந்தைகள், மனநலம் சரியில்லாதவர்கள் என்று பலரும் இவ்வாறு அவதிப்படுகிறார்கள். வெட்கத்துக்குரிய விஷயம் இது.

தனியொரு அமைப்பால் நிலைமைகளை மாற்றிவிடமுடியாது. சிறையில் உள்ள சில ஆயிரம் பேரை வெளியில் கொண்டுவர, பல ஆயிரம் பேரின் உதவி தேவைப்படுகிறது. மக்கள் உத்வேகத்துடன் முன்வந்து உதவிகள் செய்தால் அவர்களால் வேறு சில முக்கியமான கேள்விகளையும் எழுப்பமுடியும். சிறையில் உள்ளவர்களில் 50 சதவிகிதம் பேர் ஏன் தலித்துகளாக இருக்கிறார்கள்? இஸ்லாமியர்களின் கைது எண்ணிக்கை ஏன் அதிகமாக இருக்கிறது? இந்தக் கேள்விகளை எழுப்பும்போது, மனித உரிமை மீறல் என்பது கிரிமினல் குற்றம் மட்டுமல்ல, பாகுபாடு குறித்த பிரச்சினையும்கூட என்பது தெரியவரும்.

- நன்றி: ஆழம்

## காட்பரீஸ் வரலாறு



1831ஆம் ஆண்டு தன்னுடைய பல்பொருள் அங்காடியில் ஜோன் காட்பரீ கசப்புடன் கூடிய சொக்ளேற் மற்றும் கொக்கோவை விற்பனை செய்யத் தொடங்கினார். அப்போதெல்லாம் இனிப்பான சொக்ளேற் என்ன என்பது தெரியாது. 1847ஆம் ஆண்டு காட்பரீ தன் சகோதரர் பெஞ்சமினுடன் சேர்ந்து "காட்பரீஸ் பிரதர்ஸ் ஒ·.ப் பேர்மிங்ஹாம்" என்ற நிறுவனத்தை தொடங்கி முதன் முதலாக சுவைக்கக் கூடிய இனிப்பு சொக்ளேற்றை தயாரிக்கத் தொடங்கினார். ஆரம்பத்தில் இது விலை உயர்ந்த ஆடம்பரப் பொருளாகவே கருதப்பட்டது. 1853ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணிக்காக சொக்ளேற் தயாரிக்க அரசாங்கம் உத்தரவு கொடுத்தது. ஓராண்டுக்கு பின்னர் பெஞ்சமின் நிறுவனத்திலிருந்து விலக, காட்பரீயும் அடுத்த ஆண்டில் ஓய்வு பெற்றார். பின்னர் காட்பரீயின் மகன்கள் ரிச்சர்ட் மற்றும் ஜோர்ஜ் காட்பரீஸ் நிர்வாக பொறுப்பை ஏற்றனர்.

## நம்பிக்கைப் புல்!

"வாழ்க்கை முழுவதும் கஷ்டம்தான். தாங்க முடியவில்லை குருவே" என்றான் அவன்.

"என்னவாயிற்று? ஏன் புலம்புகிறாய்?" என்று கேட்டார் குரு.

"பள்ளிக்கூடப் படிப்பு பாதியில் நின்றுவிட்டது. மூன்று வியாபாரம் செய்தும் எதிலும் முன்னுக்கு வரவே முடியவில்லை. எல்லாவற்றிலும் நஷ்டம். இனிமேல் என்னால் எழவே முடியாது. வாழ்க்கையே முடிந்து போனது" என்றான்.

குரு அவனைச் சிறிதுதூரம் அழைத்துச் சென்றார். ஓர் இடத்தில் செடிகள், புல் எல்லாம் காய்ந்து கிடந்தன. "நன்றாகப் பார்த்துக் கொள். இன்னும் மூன்று நாட்கள் கழித்து வா" என்றார் குரு.



அவனுக்கு எதுவும் புரியவில்லை. மூன்று நாட்கள் கழித்து திரும்பவும் குருவைப் பார்க்க வந்தான். குரு அவனைக் கனிவோடு பார்த்தார். மூன்று நாட்களுக்கு முன்பு சென்ற அதே இடத்துக்குச் சென்றார்கள். என்ன ஆச்சரியம்! காய்ந்து கிடந்த செடிகள் பச்சைப் பசேல் என்றிருந்தன. புற்கள் பசுமையுடன் இருந்தன.

குரு சொன்னார்:

"தண்ணீரில்லாமல் இந்தச் செடிகள் வாடிக் கிடந்தன. தீய்ந்து போகும் நிலையில் இருந்தன. என்றாலும் என்றாவது மழை பெய்யும் என்ற நம்பிக்கையுடன் இருந்தன. நான் மூன்று நாட்களாக இவற்றுக்குத் தண்ணீர் ஊற்ற ஏற்பாடு செய்தேன். இப்போது பார் எவ்வளவு பசுமையாக மாறிவிட்டது. எதை வேண்டுமானாலும் இழக்கலாம். நம்பிக்கையை மட்டும் இழக்கக் கூடாது"

## கொலை செய்யும் தாவரம்



மற்றைய தாவரங்களில் ஒட்டிக்கொண்டு அவற்றின் சத்துக்களை உறிஞ்சி வாழ்கின்ற தாவரங்களை ஒட்டுண்ணித் தாவரங்கள் என்பர். ஒட்டுண்ணித் தாவரங்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம். குறையொட்டுண்ணித் தாவரம், நிறையொட்டுண்ணித் தாவரம் என்பனவே அவையாகும். குறையொட்டுண்ணித் தாவரத்துக்கு நமது நாட்டிலுள்ள குருவிச்சை உதாரணமாகும். நிறையொட்டுண்ணித் தாவரத்துக்கு உதாரணம் தூத்துமக்கொத்தான். இது ஆபத்தானது.

இத்தாவரம் தனது நூறு வீத உணவையும் தான் ஒட்டிக் கொண்டுள்ள தாவரத்திலிருந்து (விருந்து வழங்கி) உறிஞ்சிக் கொள்ளும். காலப் போக்கில் அத்தாவரம் இறந்து போக தூத்துமக்கொத்தானும் உணவின்றி மாண்டு போகும். கொலையையும் செய்து தற்கொலையும் செய்து கொள்கிறது தூத்துமக்கொத்தான்.

# வெற்றியின் இரகசியம் 07

- சி. அருண்பரத் -

வாழ்க்கையில் முழுமை யான வெற்றி சிலருக்கு மட்டுமே கிடைக்கிறது. அந்த சிலருக்கு மட்டுமே தெரிந்த வெற்றியின் இரகசியம், பலருக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தில் உருவானதுதான் இந்த வழிகாட்டித் தொடர்.


**விடாமுயற்சி!**

ஓரிரு முறை முயற்சி செய்து விட்டு, "இதற்கு மேல் என்னால் முடியாது..." என்று சொல்பவன் சராசரி. "என் இலட்சியத்தை எட்டும் வரை, முயற்சி செய்து கொண்டேயிருப்பேன்..." என்று சொல்பவன், சாதனை யாளன்.

தோல்வியால் துவண்டவர் களை, இந்த உலகம் நினைவில் வைத்திருப்பதில்லை. தோல்வி உங்களுக்கு, புதிய உற்சாகத்தையும், வைராக்கியத்தையும் கொடுக்க வேண்டுமே தவிர, விரக்தியைக் கொடுக்கக் கூடாது. யாருக்கும் முதல் முயற்சியிலேயே, மிகப் பெரிய வெற்றி கிடைத்து விடுவதில்லை.

தடைக்கற்களை, முன்னேற்றத்துக்கான படிக்கற்கள் என்று நினைத்துக் கொள்வோம். "விழ்ந்தோம்" என்று இந்த உலகம், நம்மைப் பற்றிச் சொல்லும் போது, அதே உலகம், "வென்றோம்" என்று சொல்லும்படி சாதித்துக் காட்டுவோம்.

தோல்வி என்றைக்கும் நிரந்தரமானதல்ல. நம்முடைய முயற்சிகளில், சில தோல்வியைத் தழுவலாம். ஆனால், முயற்சியே எடுக்காமல் விட்டு விட்டால், நம்முடைய வாழ்க்கையே தோல்வியில் முடியும்.



உடனுக்குடன் பலன் எதிர்பார்ப்பது, உடனே பலன் கிடைக்காவிட்டால், சோர்ந்து விடுவது சிறுபிள்ளைத்தனம். பிரச்சினையை கண்டு, ஓடி ஒளிவது கோழைத்தனம். ஓடி ஒளிவதால், பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதில்லை. பிரச்சினையின் தன்மைக்கேற்ப, தீர்வு உடனே கிடைக்கலாம் அல்லது சில காலம் கழித்துக் கிடைக்கலாம்.

விடாமுயற்சியால், வரலாற்றில் இடம் பெற்ற சிலரைப் பற்றித் தெரிந்து கொள்வோம்:

சிறுபிள்ளையாக இருக்கையில், பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட வில்மாருடாப் என்ற பெண்மணி, 1960 ஒலிம்பிக்கில், ஓட்டப் போட்டியில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்றார். ஐந்து வயதில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட ஷெல்லிமான், 1956 ஒலிம்பிக்கில் நீச்சல் போட்டியில், தங்கப் பதக்கம் பெற்றார்.

ஒரு ஊருக்குச் செல்வதற்கு, பல வழிகள் இருப்பது போல, நம்முடைய இலக்கை அடைவதற்கும், பல்வேறு வழிகள் உள்ளன. ஒரு வழி அடைபட்டால், மாற்று வழி பற்றி யோசிக்க வேண்டும். மிகப் பிரபலமான விஞ்ஞானி, அல்பேர்ட் ஐன்ஸ்டீனிடம், முட்டாள் தனத்துக்கு விளக்கம் கேட்ட போது, "ஒரே வேலையை, திரும்பத் திரும்ப ஒரே மாதிரி செய்துவிட்டு, வித்தியாசமான பலனை எதிர்பார்ப்பதற்கு பெயர் தான் முட்டாள்தனம்..." என்றாராம்.

அலெக்சாண்டர் கிரகாம் பெல், காது கேளாத தன் மனைவிக்கு, காது கேட்பதற்காக கருவி கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது தான், தொலைபேசியைத் தற்செயலாக கண்டுபிடித்தார். உங்களுக்குப் புதிய வாய்ப்பு, பிரச்சினை உருவத்தில் வரலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நமக்குத் தோல்வியோ, பின்னடைவோ வரும் போது, நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்விகள் இதோ... "தோல்வி அல்லது பின்னடைவுக்கு என்ன காரணம்? எங்கே தவறு நடந்தது? நான் இதிலிருந்து கற்றுக் கொண்ட பாடம் என்ன? இனிமேல் இந்த மாதிரி தவறு நிகழாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?"

சாதனையாளர்கள், தங்களுடைய முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்று விடுவதில்லை. தான் இழந்த நாட்டை மீட்கப் போராடிய ரொபேர்ட் புரூஸ், இந்தியாவுக்குக் கடல்வழி கண்டுபிடித்த வாஸ்கோடகாமா, எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த எட்மண்ட் ஹிலாரி மற்றும் டென்சிங் போன்ற பலரும், தங்களின் முதல் முயற்சியிலேயே வெற்றி பெறவில்லை. மகாகவி பாரதியாரும், கவிஞர் கண்ணதாசனும், தங்களின் ஆரம்பகால கவிதைப் போட்டியில், முதல் பரிசு பெறவில்லை.

அமெரிக்கா ஜனாதிபதியாகி, அடிமைத்தனத்தை ஒழித்து, வரலாறு படைத்த ஆபிரகாம் லிங்கன், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முன், ஐந்து முறை பல்வேறு தேர்தல்களில் தோல்வியைத் தழுவியவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

தொடரும்....



# ஜெமினி கணேசன்

திரை உலகில் முன்பு கதாநாயகனாக வர வேண்டுமெனில், அழகான தோற்றமும், நல்ல குரல் வளமும் இருந்தால் தான், வாய்ப்பு கிடைக்கும். அதற்காக பலர் சுமாரான தோற்றம் இருந்தாலும், அழகாக தெரியுமாறு ஒப்பனையுடன் போட்டோ அல்பம் தயாரித்து வாய்ப்பு தேடுவோரை அறிந்திருக்கிறோம்.

ஆனால், உண்மையிலேயே அழகான தோற்றமுள்ள ஜெமினி கணேசன், ஒரு முக்கியமான பட வாய்ப்புக்காக, தன் தோற்றத்தை மாற்றி, அருவருப்பான பிச்சைக்காரர் போன்ற வேடத்தோடு சென்று, வாய்ப்புக் கேட்டு வெற்றியும் பெற்றார்.

ஆரம்ப காலத்தில், ஜெமினி ஸ்ருடியோவில் நிர்வாகப் பொறுப்பு பணியில் இருந்த போது, அவருக்கு நடிப்பு மேல் தான் ஆசை இருந்தது. அதனால், ஜெமினி ஸ்ருடியோவை விட்டு விலகி, நாராயணன் கம்பெனியில், மாதம், 1,000 ரூபா சம்பளத்திற்கு நடிக்க அழைத்த போது, தயக்கத்துடன் ஒப்புக் கொண்டார். முதல் படம், "தாய் உள்ளம்." வில்லன் வேடம் தான் கிடைத்தது. அடுத்து, மூன்று பிள்ளைகள் என்ற படம், 60 யானைகளுக்கு நடுவில், இவர் நடித்த காட்சி படமாக்கப்பட்டது. பயமில்லாமல் நடித்து பாராட்டைப் பெற்றார்.

தொடர்ந்து, நாராயணன் கம்பெனியின் உரிமையாளர் நாராயண ஐயங்கார், "கணவனே கண் கண்ட தெய்வம்" படத் தயாரிப்பில் ஈடுபட்டார். அதில் கதைப்படி கதாநாயகனுக்கு, வீரம் நிறைந்த வாலிபன் மற்றும் கூன் விழுந்து, அருவருப்பான முகம் கொண்ட இரு வேறுபட்ட வேடம். அதை அழகான தோற்றம் கொண்ட ஜெமினி கணேசனால் செய்ய முடியுமா என்று சந்தேகப்பட்டார் தயாரிப்பாளர்.

இதை அறிந்த ஜெமினி கணேசன் ஒரு தந்திரம் செய்தார். அவரே ஒரு ஒப்பனையாளரிடம் சென்று, கூன் விழுந்த அருவருப்பான பிச்சைக்காரன் போன்ற தோற்றத்தில், யாரும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு மேக்கப் போட்டுக் கொண்டார்.

அந்த தோற்றத்துடன், காலை நேரத்தில் தயாரிப்பாளர் வீட்டு வாசலில் நின்றார். ஏதோ பிச்சைக்காரன் என நினைத்து, அந்த வீட்டில் இருந்தவர்கள் கண்டு கொள்ளவில்லை. ஆனால், எதிர்பாராதவிதமாக திடீரென்று வீட்டிற்கு உள்ளேயே நுழைந்து விட்டார். முதலாளி நாராயண ஐயங்கார், ஜெமினியை அடையாளம் தெரியாமல் பிச்சைக்காரர் என நினைத்து, திட்டி, வெளியே போகுமாறு விரட்டினார். நிலைமை விபரீதமாகும் முன், "நான் தாங்க கணேசன்..." என்று வேடத்தை கலைத்து, சிரித்தபடி, "நீங்க என் மீது சந்தேகப்பட்டீர்கள் இல்லையா? கூன் வேடத்திற்கு நான் பொருத்தமானவன் என்று, நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தான், அப்படி நடித்தேன்..." என்று சொன்ன போது, ஜெமினியை கட்டி அணைத்துக் கொண்டார். "கண்டிப்பாக நீதான் நடிக்கிறாய்..." என்று உறுதி அளித்தார். அஞ்சலி தேவியுடன், ஜோடி சேர்ந்து நடித்த, கணவனே கண்கண்ட தெய்வம் வெள்ளி விழா கொண்டாடி, சாதனை படைத்தது.

வீரபாண்டிய கட்டபொம்மன் படத்தில், வெள்ளையத்தேவன் கதாபாத்திரத்திற்கு, முதலில், எஸ்.எஸ். ராஜேந்திரன் தான் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். அவர் நடிக்க முடியாமல் போகவே, ஜெமினியை தேடி வந்தனர். "என்னால் நடிக்க முடியவில்லை..." என எஸ்.எஸ்.ராஜேந்திரனிடமிருந்து கடிதம் வாங்கி வந்தால் தான் ஒப்புக்கொள்வேன்..." என்று டைரக்டர் பி.ஆர்.பந்துலுவிடம் சொல்லி, கடிதத்தோடு வந்த பின்தான், ஜெமினி நடிக்க ஒப்புக் கொண்டார்.

தன் ரசிகர்களின் குடும்பத்தில் நடக்கும் விசேஷங்களுக்கு தவறாமல் சென்று வாழ்த்தும் வழக்கம் உடையவர் ஜெமினி. சினிமா வாய்ப்புகள் இல்லாத கடைசி காலத்திலும், அவரது மூத்த ரசிகர்கள், ஜெமினி கணேசன், பிறந்த நாளன்று நுங்கம்பாக்கத்தில் உள்ள இல்லத்திற்கு சென்று, கேக் வெட்டச் சொல்லி, பிறந்தநாள் வாழ்த்து கூறி மகிழ்வர்.

அவர் காலமான பின்னும், அவரது ரசிகர்கள் மறக்காமல் ஜி.ஜி.மருத்துவமனை வளாகத்தில், ஜெமினி கணேசன் மகள் கமலா முன்னிலையில் கூடி, பிறந்த நாள், நினைவு நாள் தினத்தில், அவரது படத்திற்கு மாலை அணிவித்து, அன்பை செலுத்தி வருகின்றனர்.

ஜெமினி ரசிகர்களது ஒரே கோரிக்கை என்னவெனில், திரை உலகில் மூவேந்தர்களாக திகழ்ந்தவர்களில், எம்.ஜி.ஆர்., சிவாஜி இருவருக்கும் சிலைகள் உண்டு. அதே போன்று ஜெமினி கணேசனுக்கும் சிலை வைக்க வேண்டும் என்பதாகும். அரசுக்கும், நடிகர் சங்கத்திற்கும் தங்கள் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

✘ தான் ஒரு பெரிய ஹீரோ என்ற பந்தா கொஞ்சமும் இல்லாமல் யாரைப் பார்த்தாலும், "என்ன பிரதர்..." என்று சகஜமாக பழகும் பண்புடையவர்.

✘ எட்டயபுரத்தில், 1963இல் நடந்த பாரதிவிழாவை, ஜெமினி - சாவித்திரி தலைமையில் பொறுப்பேற்று நடத்தினர். 30 கார்களில் திரைக்கலைஞர்களை அழைத்துச் சென்றார். சொந்த செலவில் குடிநீர் தொட்டியும் திறந்து வைத்தார்.

✘ ரசிகர் மன்றங்களை, நற்பணி மன்றங்களாக மாற்றிய முதல் நடிகர்.

✘ ஓவர் ஆக்ட் பண்ணக்கூடாது, இயற்கையாக நடிக்க வேண்டும் என நினைப்பவர்.

✘ விக்கை அதிகம் பயன்படுத்தாத ஒரே நடிகர்.

✘ தென் ஆபிரிக்காவில் உள்ள தமிழர்கள், ஜெமினி கணேசன் மீது காட்டிய அன்பின் அடையாளமாக, ஒரு சினிமா தியேட்டருக்கு ஜெமினி என்று பெயர் வைத்துள்ளனர்.

✘ யோகாசனத்தில் அனைத்து பயிற்சியும் பெற்றுள்ளார்.

✘ இவருடைய பெண் குழந்தைகளில் எவருமே, சோடை போகவில்லை. மருத்துவ உலகில் சாதனை படைத்த, டாக்டர் கமலா, ரேவதி, ஜிஜி, கலை உலகில் நடிகை ரேகா, எழுத்து துறையில் நாராயணி என்று அனைவருமே திறமைசாலிகள்.

- எஸ்.எஸ்.ராமகிருஷ்ணன் -





# புதிர்ப்போட்டி 19

## பரிசில்களை வெல்லுங்கள்

சரியான விடை எழுதுபவர்களின் விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவருகின்றது

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

## மூன்று மாத முடிவில் அதிக கேள்விகளுக்குச் சரியான விடைகளை எழுதியிருக்கும் மூன்று வெற்றியாளர்கள்

### முதலாம் இடம்



பெயர்:
இ.பிரியதர்சினி
பாடசாலை:
யா /உடுவில்
மகளிர் கல்லூரி.

### இரண்டாம் இடம்



பெயர்: த.மதுஷா
பாடசாலை:
யா/ மெதடிஸ்த
பெண்கள் உயர்தரப்
பாடசாலை.

### மூன்றாம் இடம்



பெயர்:
கு.ஜெயராமன்
பாடசாலை:
யா/ மத்திய கல்லூரி.

**மூவரையும் தினமுரசு வாழ்த்துகின்றது**

இவர்களுக்கான பரிசில்கள் அடுத்த மூன்று மாத முடிவில் வெற்றி பெறும் மூவருடன் சேர்த்து ஆறு வெற்றியாளர்களுக்குமான பரிசில்கள் ஆண்டிறுதியில் நடைபெறும் விழாவில் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

## புதிர்ப்போட்டி 17 இல் வெற்றியீட்டியோர்



பெயர்:
கி.கயறூபி
பாடசாலை:
யா/ சங்கானை
சிவப்பிரகாச மகா.வித்தி



பெயர்:
ஆ.கீர்த்தனா
பாடசாலை:
யா/ சங்கானை
சிவப்பிரகாச மகா.வித்தி



பெயர்:
க.அபிராமி
பாடசாலை:
யா/ வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை



பெயர்: த.மதுஷா
பாடசாலை:
யா/ மெதடிஸ்த
பெண்கள் உயர்தரப்
பாடசாலை.



பெயர்: கி.டிசாயினி
பாடசாலை:
யா/ சங்கானை
சிவப்பிரகாச மகா.வித்தி

## 1 பொது அறிவுத் துணுக்குகள்

1) தென்மேற் பருவக் காற்றை யாழ்ப்பாணப் பரப்பில் எப்படி அழைப்பர்?

2) உலகின் மிக உயரமான மரம் எது? எங்குள்ளது?

3) டெசிபல் (Decibal -dB) என்பது எதன் அலகு?

4) சோதனைக் குழாய் மூலம் பிறந்த முதற் குழந்தை எது?

5) டீசல் இயந்திரத்தை அமைத்தவர் யார்?

## 2

1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையைப் பின்வரும் கணிதக் குறியீடுகளுக்குத் தரப்பட்டுள்ள பொருளைக் கருத்திற் கொண்டு உமது விடையைக் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

$>$ எனின் சமன்
$+$ எனின் கூடுதலானது
x எனின் சிறிது கூடுதலானது
$<$ எனின் சிறிது குறைவானது
$=$ எனின் குறைவானது

1) $B + C$ எனவும் $C > D$ எனவும் இருப்பின் (...........)
2) $A > C$ எனவும் $D \times C$ எனவும் இருப்பின் (...........)
3) $B \times CD$ எனவும் $C < BD$ எனவும் இருப்பின் (...........)
4) $A \times B$ எனவும் $B > C$ எனவும் இருப்பின் (...........)
5) $A = BC$ எனவும் $C = B$ எனவும் இருப்பின் (...........)

## புதிர்ப்போட்டி 17 இற்கான சரியான விடைகள்

**1**
1) லூயிஸ் பாஸ்டர் (1895)
2) 1917
3) ஆபிரகாம்லிங்கன்
4) பிளாபேர்ட்ஸ் (1856)
5) றொபேர்ட் ஈ பியரி, மத்தியு ஹென்சன் (1909)

**2**
1) 1
2) 3
3) 4
4) 3
5) 2

**3**
1) 4 மணித்தியாலம்
2) 60 Km
3) 2400/=
4) 3 : 2
5) 31.1.2000

## புதிர்ப்போட்டி 17 இற்கான சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறுவோர்

பெயர்: இ.பிரியதர்சினி
பாடசாலை: யா/ உடுவில் மகளிர் கல்லூரி.

பெயர்: கு.ஜெயராமன்
பாடசாலை: யா/ மத்திய கல்லூரி.

பெயர்: மெ.இங்கிதை
பாடசாலை: யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

பெயர்: து.கோகுலன்
பாடசாலை: யா/ இந்துக் கல்லூரி.

பெயர்: க.பபித்திரா
பாடசாலை: யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.



புதிர்ப்போட்டி 19 இற்கான விடைகளை எதிர்வரும் டிசம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

### அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல .373 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

### முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்தி லுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ் பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

### விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ..............................................
பாடசாலையின் பெயர் ..............................................
தரம் :- :-..............................................
தொலைபேசி இல.:-..............................................
முகவரி :-..............................................
..............................................

# உயர்தரப் பரீட்சார்த்திகளுக்கு செயன்முறைப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

2012 ஆம் ஆண்டின் க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கான பாடங்களுக்குரிய செயன்முறைப்பரீட்சைகள் புதிய மற்றும் பழைய பாடத்திட்டங்களுக்காக நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திக்தி செவ்வாய்க்கிழமை உரிய பரீட்சை நிலையங்களில் நடத்தப்படவுள்ளது.

இதில் மனைப்பொருளியல், நடனம் (சிங்களம்), நடனம் (பரதம்), சங்கீதம் (கீழைத்தேயம்), சங்கீதம் (கர்நாடகம்), சங்கீதம் (மேற்கத்தேயம்), நாடகமும் அரங்கியலும் (சிங்களம்), நாடகமும் அரங்கியலும் (தமிழ்) ஆகிய பாடங்களுக்குரிய செயன்முறைப் பரீட்சை நடைபெறவுள்ளது.

எழுத்துப் பரீட்சைக்கு தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் உரிய பாடசாலையின் அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அவர்கள் விண்ணபத்தில் குறிப்பிட்ட முகவரிக்கும் தற்போது தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை பற்றி ஏதாவது விசாரணைகள் இருப்பின், இலங்கை பரீட்சைத் திணைக்களத்துடன் 0112784208, 0112784537, 0113188350 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

# இஸ்லாமிய புத்தாண்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஹிஜ்ரி 1434 முஹாரம் இஸ்லாமிய புத்தாண்டு போட்டிகள் இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளன.

யாழ். பிளவ்ஸ் ஹாஜியார் பவுண்டேசனின் அனுசரணையில் யாழ். மாவட்ட அஹதியா சன்மார்க்க போதனாபீடம் பாடசாலை, மத்றஸா மாணவர்களுக்காக பேச்சு, கவிதை, கஸீதா, கிறாஅத், கிப்ழ், இஸ்லாமியகீதம், அதான், ஹதீஸ்மனனம், பொது அறிவுப்போட்டிகளை எதிர்வரும் டிசம்பர் மாதம் 8ஆம் திகதி யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடாத்துகின்றன.

கவிதையும், கட்டுரைப் போட்டியும் திறந்த போட்டியாக வயது வித்தியாசமின்றி எவரும் பங்கு பற்றலாம். கவிதைகள் 500 சொற்களுக்கு குறையாமல் கீழே தரப்பட்டுள்ள தலைப்பில் எழுதி அனுப்பலாம் இதில் தலைப்புக்களாக 'துன்பத்தில் ஓர் முஸ்லிம் பெறும் படிப்பினை', 'யாழ்ப்பாணத்தில் பிறந்து வாழ்ந்து மறைந்த யாழ். முஸ்லிம் சமூக சேவையாளர் ஒருவரின் போற்றத்தக்க சேவை' போன்றனவாகும்.

கட்டுரைகள் 2500 சொற்களுக்கு குறையாமல் கீழ்காணும் தலைப்புகளில் "இஸ்லாமிய வரலாற்றில் ஹிஜ்ரத் ஒரு திருப்பு முனை", "யாழ்முஸ்லிம் கொடை வள்ளல்களால் வக்பு செய்யப்பட்ட தர்ம சொத்துக்களை பாதுகாப்பதற்கான வழிமுறை" போன்றன வாகும்.

கவிதைகள், கட்டுரைகளை எதிர்வரும் டிசம்பர் மாதம் 6ஆம் திகதிக்கு முன்பாக தலைவர், யாழ். மாவட்ட அஹதியா சன்மார்க்கபோதனாபீடம், 165, கலீபா அப்துல் காதர் வீதி, நாவலர் வீதி, முஸ்லிம் வட்டாரம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.பரிசளிப்பு விழா எதிர்வரும் டிசம்பர் மாதம் 9ஆம் திகதி யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறும். (105)

# வழிகாட்டல் கருத்தரங்கு

தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். இந்துக் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பாடசாலைகளின் பிரபல ஆசிரியர்களும், வடமராட்சி கல்வி வலய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரமூர்த்தி ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டும் கருத்தரங்கை நடத்தவுள்ளதாக கழகத் தலைவர் எஸ். சத்தியானந்தன் தெரிவித்துள்ளார். (62)

# பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரிய சேவை பட்டதாரி ஆசிரியர்களை மாவட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு (சிங்களம், தமிழ் மொழி மூலம்) பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதில் விஞ்ஞான, ஆங்கில, கணித பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு பிற மாகாணத்தை சேர்ந்த விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கமுடியும். மேலும் கலை, வர்த்தகம், அழகியல் கல்வி பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு கிழக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தை கொண்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிலும் ஆங்கிலபாட ஆசிரிய விண்ணப்பதாரிகளுக்குமட்டும் ஆங்கில மொழி மூலமும் கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படும். இதில் பொது உளச்சார்பு,பொது அறிவு நேரம் ஆகிய 2 பிரிவுகளாக பரீட்சை நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் டிசம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, இல. 198, உட்துறைமுக வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை தினமுரசு காரியாலயத்தில் பார்வையிடமுடியும்.




அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) ஆகியோரின் இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் அரியாலை கிழக்கு மற்றும் கொக்குவில் மேற்கு ஆகிய மாதர்சங்கங்களுக்கு தையல் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவரும் ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச இணைப்பாளருமான அம்பலம் ரவீந்திரதாசன் சங்கங்களுக்கு தையல் இயந்திரங்களைக் கையளிப்பதையும், நல்லூர் பிரதேச உதவி செயலர் திருமதி சுபாஜினி, கிராமஅலுவலர் எஸ்.விஜிதன், திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், கிராம அலுவலர் திருமதி ரா.காயத்திரி, நல்லூர் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.

# மெய்தான் பாருங்கோ...

## 'துப்பாக்கி' கலாசாரம்



இப்ப மழைக்காலம் தொடங்கியிட்டுது தானே! மழை ஆரம்பிக்குதெண்டவு டன எங்கட ஊர்சனங்களுக்கு மனசில மெத்தப் புளுகம்தான் வரும்பாருங்கோ!

மழை ஒருபாட்டம் ரண்டு, மூண்டு நாளைக்கு அடிச்சிட்டு ஓய்ஞ்சு போக, அந்த இடைவெளியைப் பயன்படுத்தி வயலுகளை உழுகிறவை ஒருபக்கம்... கச்சான், கௌபி, பயறு போடுறதுக்கு மண்ணைச்சாறிப் பதப்படுத்துறவை இன்னொருபக்கம்... வீட்டில மரக்கறி வகையளை நடுகிறதுக்கு ஆயத்தப் படுத்துறவையும் ஒருபக்கமாக... உழைப்பிற்குரிய செயற்பாடுக்ள் வன்னிப்பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு பகுதியளிலும் அரங்கேறத் தொடங்கியிடும் கண்டியளே!

இந்த வருசமும் இந்த அரங்கேற்றத்தை எங்கட சனங்கள் நடத்திப்போட்டு அதற்குரிய பலனை எதிர்பாத்துக்கொண்டிருக்குதுகள். அதோடை பாருங்கோ, சண்டைக்கு முன்னம் தேடியதெல்லாம் இழந்து போய் நிற்கிற இந்த நேரத்தில, மீண்டும் கஷ்டப்பட்டு உழைச்சு பழைய வாழ்க்கையைத் தேடவேணுமெண்ட வைராக்கியத்தில நிற்கினம். இப்பிடி இந்தச்சனங்கள் நிற்க, போரின் வலியை அனுபவியாத ஆட்கள் சிலபேர் வன்னிக்கு வெளியில என்ன செய்து கொண்டிருக்கினம் தெரியுமே?

யாழ்ப்பாணத்தில தீபாவளியண்டு ஒருதியேட்டரில புதுசா ஒரு படம் ஓடவிட்டவையாம். அதுக்கு அந்தப் படத்தின்ர கதாநாயகனுக்கு கட்டவுட்டுகள் கட்டி பாலால அபிசேகமும் செய்திருக்கினமாம். கேள்விப்பட்டன்.

மெய்யே! தெரியாமல்தான் கேட்கிறன். எங்கட இனம், சனம், மொழி, பண்பாடு, காலாசாரமெல்லாம் எந்த 'ரூட்டில' போய்க் கொண்டிருக்குது? சண்டைக்குள்ள அம்பிட்டதுகள் தங்கட வாழ்க்கையை மேம்படுத்தப் போராடுதுகள்! இதுகள் என்னடா வெண்டால்...? தமிழ்நாட்டிலதான் உந்த வியாதி பரவி நிக்குதெண்டால், உதை ஆரடாப்பா தலையில காவிக்கொண்டு வந்து இஞ்சை காட்டிவிட்டிட்டு நிற்கிறான்?

ஆரம்பகால சண்டை நேரங்களில ஆமி - பொலிசுக்குப் பயந்து திரிஞ்சு பிறகு போராட்டம் அது - இதெண்டு மாரடிச்சுத் திரிஞ்சு... இப்ப அதுகள் ஒண்டும் இல்லையெண்டாப்போல 'தம்பிமார்' சிலபேர் தலைவிரிச்சாடத் தொடங்கியிட்டினம் போலக் கிடக்குது.

எங்கட இனம்சனத்துக்கு எவ்வளவோ தேவையள் கிடக்குது. அதுவும் உந்த வன்னிப் போருக்கை அம்பிட்ட தாய், தேப்பனில்லாத சின்னஞ்சிறுசுகள், ஆகப்போக நல்ல சாப்பாடில்லாமல் சோமாலியா, சூடான் நாட்டுப் பிள்ளையள் மாதிரி சூம்பிப் போய் இருக்குதுகள். அந்தப் பிள்ளையளுக்கு உந்தக் கடுதாசி மட்டைக்கு மேல ஊத்த வெளிக்கிட்ட பாலெல்லாத்தையும் கொண்டு வந்து பங்கிட்டுக் கொடுத்திருக்கலாம்தானே?

ஒரு காலத்தில யாழ்ப்பாண மண் கல்வி ஆளுமையில பேர் பெற்ற மண்ணெண்டு பெருமையடிச்சுத் திரிஞ்ச ஆட்களெல்லாம் எங்கை போயிட்டினம்? இப்ப கல்வி அறிவு குறைஞ்சு தலைக்குள்ள களிமண் பத்திப்போய்கிடக்கிறதாலதான் இப்படியான 'கண்றாவிக் கூத்துகள்' நடக்கத் தொடங்கியிட்டுதெண்டு ஊர்ச்சனம் பறையுறது உங்கையொருத்தருக்கும் கேட்கேல்லையே?

தமிழ்நாட்டில உந்தக்கூத்துகள் வலு அமோகம் பாருங்கோ. அந்தநேரம் 'குமுதம்' புத்தகத்தில படிச்ச கதையொண்டு ஞாபகத்துக்கு வருகுது.

ஒருவன் ஒரு 'ஸ்டாரின்ர' ரசிகன் கண்டியளே! அவனுக்கும் மனைவி, பிள்ளையெண்டு ஒரு குடும்பம். ஒருநாள் அவன்ர வீட்டில பிள்ளைக்கெண்டு வைச்சிருந்த மாப்பெட்டியைக் காணேல்லை. தாய்க்காரி எல்லாஇடமும் தேடியும் மாப்பெட்டி அம்பிடேல்லை. குழந்தை பசிதாங்கேலாமல் படுக்கையில நிமிந்து கிடந்தபடி... கையைக் காலைப் போட்டு அடிச்சபடி அழுது கொண்டு கிடக்குது.

அப்ப அந்த மாப்பெட்டிக்கு என்ன நடந்தது?

அண்டைக்குப்பாருங்கோ தியேட்டரில ஸ்டாரின்ர படம் புதுசா ஓடத் தொடங்கியிருக்குது. கட்டவுட்டுக்கு பசுப்பால் இல்லாத நிலையில, அந்தப் பிள்ளையின்ர தேப்பன்காரன் மாப்பெட்டியைக் கள்ளமாக எடுத்துக்கொண்டு போய், மாவைத் தண்ணியில கரைச்சு ஸ்டாரின்ர கட்டவுட்டுக்கு 'பாலாக' ஊத்திச் சந்தோசப்பட்டிருக்கிறான்.

இப்படியான ஒரு நிலைமை இனி எங்கட பகுதிக்கையும் வரப்போகுது. யாழ்ப்பாணத்தில புதிசா ஒரு படம் வாறதுக்கு முதல்நாள் இரவில, கன்றை ஈன்ற பசுமாடுகள் இனிக்காணாமல் போகலாம்?! வணிகநிலையங்கள் உடைக்கப்பட்டு சகல மாப்பெட்டிகளும் களவாடப்படலாம்?!

தமிழ்நாடும் - ஈழநாடும் தொப்புள்கொடி உறவெண்டதை தீபாவளியண்டு நிரூபிச்சுக்காட்டினவை, அங்கை குஷ்புவுக்கு கோவில்கட்டி கும்பிடமாதிரி, இனி இஞ்சையும் ஒரு 'கவர்ச்சித் தாரகை'யை கடவுளா நினைச்சு சிலை எடுக்கலாம்? ஏனெண்டால் கடல்தான் எங்களைப்பிரிக்குது. மற்றும்படி 'உணர்வால' நாங்கள் தமிழ்இனம் எண்டு ஒண்டாத்தான் இருக்கிறம் கண்டியளே!.

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# அவிந்த உணவில் 'அரணை'

# 50,000 நட்டாடு வழங்க உத்தரவு

(வவுனியா)

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் "அரணை" என்று அழைக்கப்படும் விச ஜந்து அவிந்த நிலையில் காணப்பட்ட உணவு பொதியை உற்கொண்டு பாதிப்படைந்த நபருக்கு 50,000 ரூபா நஷ்ட ஈடு வழங்குமாறு உணவக உரிமையாளருக்கு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

உணவகமொன்றில் கடந்த வியாழக்கிழமை மதியம் உணவை உற்கொண்ட நபர் ஒருவர் பாதிப்படைந்த நிலையில் வவுனியா பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் வவுனியா சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து குறித்த வர்த்தக நிலையத்திற்கு எதிராக வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதனைத்தொடர்ந்து பாதிப்படைந்த நபருக்கு 50,000 ரூபா நஷ்டஈடாக வழங்க வேண்டும் எனவும் தண்டமாக 10000 ரூபா செலுத்த வேண்டுமெனவும் உணவக உரிமையாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டதுடன் இவ் உணவகம் பொது சுகாதார பரிசோதகர்களின் பரிந்துரைக் கமைய சீரமைக்கப்பட வேண்டும் எனவும் அதுவரை உணவகத்தை மூடுமாறும் நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளதாக வவுனியா நகரசபை பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். இச்சம்பவத்தில் பாதிப்படைந்த நபர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக வவுனியா நகரசபையின் பொது சுகாதார பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

# பொதுச் சுகாதாரபரிசோதகர்கள் வர்த்தக நிலையம் மீது முற்றுகை

(அச்சுவேலி)

அச்சுவேலிப்பகுதியில் பொது சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர்சோதனையின் போது பலசரக்கு கடை ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

மாதாந்த பொதுச்சுகாதார நடவடிக்கையின் போதே மேற்படி கடை திடீர்சோதனைக்க உட்படுத்தப்பட்டபோது பாவனைக்கு உதவாத சுமார் 70 வகையான பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே இக்கடை உரிமையாளருக்கு பிரதேச சபையினரால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலைக் கருத்தில் எடுக்காமல் செயற்பட்டதுடன் கடையின் அளவினை விட மேலதிகமான பொருட்களை வீதியின் அருகில் வைத்து விற்பனை செய்ததுடன் பாவனைக்கு உதவாத பொருட்களை தேக்கி வைத்திருந்த குற்றச்சாட்டுக்கு அமைவாக இக் கடை உரிமையாளருக்கு எதிராக வழக்கு தொடரப்படவுள்ளது.

# இலங்கையில் காலநிலை மாற்றம் சர்வதேச நாடாளுமன்ற மாநாடு

(கொழும்பு)

இலங்கையில் காலநிலை மாற்றம் பற்றிய சர்வதேச நாடாளுமன்ற மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றும் நாளையும் நடைபெறும் மாநாட்டில் ஆசிய, ஆபிரிக்க மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற அங்கத்தவர்கள் கலந்து கொள்வார்கள்.

இந்த நிகழ்ச்சியை கிளை மேற் பார்லிமென்ட் என்ற அமைப்பு ஏற்பாடு செய்கிறது.

காலநிலை மாற்றத்தால் உலகளாவிய ரீதியில் எழக்கூடிய சவால்களை வெற்றி கொள்ளும் வழிவகைகளைக் கண்டறிவது மாநாட்டின் நோக்கமென ஐக்கிய நாடுகள் சபையின் பிராந்திய தொழில்நுட்ப பிரதிநிதி பி.எச்.டி.புச்சையா தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த செய்தி யாளர் மாநாட்டில் இக்கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்வலு எரிசக்தி அமைச்சின் ஆலோசகர் அசோக அபயகுணவர்த்தன உரையாற்றிய போது,

இலங்கை மூன்றாம் உலக நாடு என்ற ரீதியில் நிலைபேறான அபிவிருத்திப் பாதையில் பிரவேசிக்கும் சமயத்தில் கால நிலை மாற்றங்கள் குறித்து கவனம் செலுத்துவது அத்தியாவசியமானது என்றார்.

# கருவாடு பதனிடும் உபகரணம் வழங்கல்



(வேலணை)

வேலணையில் கருவாடு பதனிடுவதற்கான உபகரணம் வழங்கும் நிகழ்வு வேலணை பிரதேச செயலர் பிரிவின் திட்டமிடல் பணிப்பாளர் மீரா தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வாழ்வின் எழுச்சி (திவிநெகும) திட்டத்தின் கீழ் வேலணை அம்பிகைநகர் துறையூர், புங்குடுதீவு, பகுதி கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு மீன்களை கருவாடாகப் பாதுகாப்பதற்கு எளிய முறையில் காயவைத்துப் பதப்படுத்தும் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

இதில் வேலணை பிரதேச சபையின் தவிசாளரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச பொறுப்பாளருமான சி.சிவராசா (போல்) பயனாளிகளுக்கான உபகரணங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபையின் உப தவிசாளர் சி.கார்த்திகேசன் மற்றும் ஜே-14, ஜே-17 கிராமசேவையாளர்களும் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# தமிழ் அகதி தற்கொலை முயற்சி

(கொழும்பு)

அவுஸ்ரேலியா சிட்னியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர் ஒருவர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

குறித்த நபர் இலங்கையில் இருந்து படகு மூலம் 2009 யூன் மாதம் அவுஸ்ரேலியாவுக்குச் சென்றுள்ள நிலையில், அந்த நாட் டுக்கு பாது காப்பு அச்சுறுத்தல் என்று தெரிவித்தே தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை 2:40 மணியளவில் கயிற்றால் கழுத்தை நெரித்து அவர், தற்கொலைக்கு முயற்சித்தமையை அவதானித்த ஆப்கானிஸ்தானிய அகதி ஒருவர் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த அகதியை அவுஸ்ரேலிய அதிகாரிகள் காப்பாற்றியுள்ளனர்.

இவர், இரண்டு மாதங்களுக்கு முன்னர், மாரிபிர்நொங் தடுப்பு முகாமில் இருந்து சிட்னிக்கு மாற்றப்பட்டார்.

இதேவேளை கடந்த இரண்டு கிழமைகளுக்கு முன்னரும் நாடு கடத்தப்படவிருந்த இலங்கை தமிழர் ஒருவர் தற்கொலைக்கு முயன்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட 38 மாணவர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

கம்பளை, பன்விலதன் வித்தியாலயத்தைச் சேர்ந்த 38 மாணவர்கள் ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடல் அரிப்பு, மயக்கம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இவர்கள் கம்பளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் இந்த மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இவர்களில் சுமார் 7பேர் சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தை அடுத்து கம்பளை, உடபலாத்த பிரதேச சுகாதார பிரிவினர் குறித்த பாடசாலைக்குச் சென்று பரிசோதனைகளை நடத்தியுள்ளனர். இருப்பினும் இந்த ஒவ்வாமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கம்பளை ஜினராஜ கல்லூரியிலும் நேற்றைய தினம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவிகள் இவ்வாறானதொரு ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டு மொழிகளில் கடமையாற்ற பதிவாளர்களுக்கு சந்தர்ப்பம்

(கொழும்பு)

விவாக மற்றும் இறப்பு அத்தாட்சிப் பத்திர பதிவாளர்கள் இரண்டு மொழிகளில் கடமையாற்ற சந்தர்ப்பம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது பதிவாளர்கள் தமது நியமனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் மாத்திரமே கடமைகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருப்பதாக அரச மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஆர்.ரணவக்க தெரிவித்துள்ளார்.

பதிவாளர்கள் பலர் இரு மொழிகளிலும் கடமையாற்றுவதற்கான திறமையைக் கொண்டிருந்த போதிலும் அவர்கள் நியமன மொழி மூலம் மாத்திரமே கடமையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொது நிர்வாக அமைச்சின் செயலாளருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் பதிவாளர்கள் இரண்டு மொழிகளிலும் கடமையாற்ற சந்தர்ப்பம் வழங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அரச மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.




நேற்றுமுன்தினம் யாழ் ரில்கோ விடுதியில் நடைபெற்ற 15ஆவது ஆளுநர்களின் மாநாட்டின் போது மாநாட்டின் தலைமைப் பொறுப்பை மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலான வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் கையளிப்பதையும், மத்திய வங்கியின் ஆளுநர் அஜித்நிவாட்கப்ராலிற்கு நினைவுப்பரிசு ஒன்றை வடமாகாண ஆளுநர் வழங்குவதையும் மற்றும் ஆளுநர்களின் 15ஆவது மாநாடு நடைபெறுவதையும் இப்படங்களில் காணலாம். (படங்கள்: 02, கிரு)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

வரலாறு | 33 | T | I |

ஆசிரியர் : V.முரளி

கடந்த 13.11.2012 அன்று வெளியான வரலாறு மாதிரி வினாத்தாளுக்குரிய விடைகள்

| வினா | விடை | வினா | விடை | வினா | விடை | வினா | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| (01) | ii | (11) | i | (21) | iii | (31) | iv |
| (02) | iii | (12) | i | (22) | ii | (32) | i |
| (03) | i | (13) | iii | (23) | iv | (33) | ii |
| (04) | iv | (14) | iv | (24) | i | (34) | iii |
| (05) | iv | (15) | ii | (25) | iii | (35) | iv |
| (06) | iii | (16) | iii | (26) | ii | (36) | i |
| (07) | i | (17) | ii | (27) | i | (37) | ii |
| (08) | ii | (18) | ii | (28) | i | (38) | iv |
| (09) | iv | (19) | iv | (29) | iv | (39) | i |
| (10) | iii | (20) | i | (30) | iii | (40) | iii |

01) ஆ.

i.A. தேவநம்பிய தீசன்
B. சப்புமல்குமாரயா
C. 11 ஆம் இராசசிங்கன்
D. 1 ஆம் விமலதர்மசூரியன்

ii.
A. மனிதனும் குதிரைத்தலையும்
B. நிஸ்ஸங்கலதா மண்டபம்
C. அங்கர்வாட் தேவாலயம்
D. கொரவக்கல்

iii
A. இபன்பதூதா
B. சென். அன்னமேரி தேவிமாதா
C. வெலிவிட்ட சரணங்கர தேரர்
D. செனரத் குணவர்த்தன.

02) i. ◆ சமவெளிப் பிரதேசம்,
◆ நீர் வசதி, மண்வளம், காலநிலை இந்தியாவை ஒத்திருந்தமை.

ii. ◆ விஜயனும் தோழர்களும்,
◆ மதுராபுரி இளவரசியும் குழுவினரும்,
◆ பண்டுவஸ்தேவனும் குழுவினரும்,
◆ பத்தகச்சானாவும் குழுவினரும்.

iii. ◆ கிராமத்தின் பொதுவேலைகளை சமாதான முறைகளில் மேற்கொண்டமை.
◆ பிக்குகளின் சாசனத்தை ஏற்றுக்கொண்டமை.
◆ கிராமத்தலைவன் காமினிக்கு கட்டுப்பட்டமை.
◆ கிராம நடவடிக்கைகளுக்கும் பாதுகாப்பிற்கும் ஒத்துழைப்பு வ்ழங்கியமை.
◆ கிராமத்தில் ஏற்பட்ட சிறு பிரச்சினைகளை கிராம மட்டத்திலேயே தீர்த்து வைத்தமை.

iv. ◆ அனுராதபுரத்தை தலைநகராக்கியமை.
◆ அங்கு நகரத்திற்குரிய இலட்சணங்களை ஏற்படுத்தியமை.
◆ அரசு எனும் பெயரை அறிமுகப்படுத்தியமை.
◆ கிராம எல்லைகளை நிர்ணயித்தமை.
◆ முதன்முறையாக குளங்களை அமைத்தமை.
◆ அபயவாவி, காலவேல, சித்தராஜ போன்ற பூதகணங்களின் வழிபாட்டிற்காக கோயில்களை அமைத்தமை.
◆ நீண்டகாலம் இலங்கையை ஆட்சிசெய்த மன்னன் 70 வருடங்கள்.
◆ ஒழுங்கான நகர நிர்வாக முறையை ஏற்படுத்தியமை.
◆ நகரகுத்திக பதவி.

03) i. ◆ மேலைத்தேய, கீழைத்தேய வர்த்தகப்பாதையின் மத்தியில் அமைந்திருத்தல்.
◆ பட்டுப்பாதையில் இருத்தல்.
◆ இந்தியாவிற்கு அண்மையில் தனித்து அமைந்திருத்தல்.
◆ இலங்கையில் சிறந்த துறைமுகங்கள் அமைந்திருந்தமை.
◆ பருவக்காற்றுக்களின் செல்வாக்கிற்குட்பட்ட நீரோட்டப்பாதையில் அமைந்திருந்தமை.

ii. ◆ சூரதிஸ்ஸ மன்னன் காலத்தில் சேனன், குத்திகன் எனும் குதிரை வியாபாரிகள் அவனைக் கொன்று அரசைக் கைப்பற்றி 22 வருடங்கள் ஆட்சி செய்தமை.
◆ அசேலனைக் கொன்று எல்லாளன் 44 வருடங்கள் ஆட்சி செய்தமை.
◆ வலகம்பா காலத்தில் பூலகத்த உட்பட்ட குழுவினர் எழுவர் அரசைக் கைப்பற்றி ஒருவர் பின் ஒருவராக 14 வருடங்கள் ஆட்சி செய்தமை.
◆ வங்கநாசிததிஸ்ஸன் காலத்தில் கரிகாலன் எனும் சோழன் படையெடுத்து 12000 சிங்களவரைச் சிறைப்பிடித்துச் சென்றமை.
◆ மித்சென் காலத்தில் பண்டு, பாரிந்த ஆகியோரின் ஆக்கிரமிப்பு.
◆ 1ஆம் சேனன் காலத்தில் ஸ்ரீமாறஸ்ரீவல்லபனின் ஆக்கிரமிப்பு, 5ஆம் மகிந்தனின் காலத்தில் 1ஆம் ராஜராஜனின் ஆக்கிரமிப்பு.

iii.
A. ◆ அரசுரிமையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இலங்கை மன்னர் தென்னிந்திய மன்னரின் உதவியைப் பெற்றமை.
◆ அபயநாகன், 1 ஆம் முகலன், 11 ஆம் அக்போ, சிறிநாகன்.
◆ தென்னிந்திய மன்னர் இலங்கை மன்னனின் உதவியைப் பெற்றமை.
◆ விவாகத் தொடர்புகளை ஏற்படுத்தியமை.
◆ இளநாக மன்னனின் மகன் சந்தமுகசிவன் தென்னிந்திய இளவரசியை மணம் முடித்தமை.
◆ 4ஆம் மகிந்தன் தென்னிந்திய இளவரசியை மணமுடித்தமை.
◆ சிறைக்கைதிகளாகக் கொண்டு சென்றதும் மீட்டு வந்ததுமான தொடர்பு கரிகாலன், கஜபாகு மன்னர்களிடம் நிலவியது.

iv. ◆ தென்னிந்தியாவின் அமராவதி, நாகார்ஜுனா போன்ற பௌத்தமத்திய நிலையங்களுடன் இலங்கை பிக்குகளுக்கு தொடர்புகள் இருந்தமை.
◆ தென்னிந்தியாவிலிருந்து மகாயான பௌத்தம் இங்கு அறிமுகமானது.
◆ பல்லவ, அமராவதி கலைப்படைப்புகள் இங்கு வந்தமை.
◆ அமராவதி சிலை போன்ற அவுக்கண தொலுவில புத்தர்சிலை, அஜந்தா ஓவியங்கள் போன்ற சிகிரியா ஓவியங்கள்.
◆ திருகோணமலை போன்ற இடங்களில் இந்துக் கோயில்கள் நிர்மாணம்.
◆ 1 ஆம் கஜபாகுவின் சோழராச்சிய ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து பத்தினி தெய்வ வழிபாடு இங்கு அறிமுகமானது.

04) i. தம்பதெனியா, யாப்பகூவ, குருநாகல்.

ii. ◆ கலிங்கமாகனை பொலனறுவையிலிருந்து விரட்டியமை.
◆ இரு தடவைகள் ஆக்கிரமித்த ஜாவா மன்னன் சந்திரபானுவை முறியடித்தமை.
◆ பௌத்தபிக்குகள் தொடர்பாகவும் விகாரை நிர்மாணம் தொடர் பாகவும் தம்பதெனிகதிகாவத நூலை உருவாக்கியமை.
◆ பெலிகல குகையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த புனிததந்த தாதுவை தம்பதெனியாவில் அமைத்த தலதா மாளிகையில் வைத்தமை.
◆ வருடாந்தம் உபசம்பதா விழாவை நடத்தியமை.
◆ சிறந்த அறிஞனாகத் திகழ்ந்த இவன் கலிகால சர்வஞான பண்டிதன் எனப் புகழப்பட்டான்.

iii. ◆ பாதுகாப்பு - தம்பதெனிய இராசதானி காலத்தில் ஏற்பட்ட வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளை சமாளிப்பதற்காக யாப்பகூவவை தலைநகராக்கியமை.
◆ மலைகளால் சூழப்பட்ட கம்பளை, நீரால் பாதுகாக்கப்பட்ட கோட்டை என தலைநகரங்கள் மாற்றம் பெற்றமை.
◆ அடிக்கடி ஏற்பட்ட படையெடுப்புகள் - சந்திரபானு, ஆரியசக்கர வர்த்தி, சென்ஹோ.
◆ பொருளாதாரத்தில் முக்கியத்துவம் பெற்ற வர்த்தகம் நடைபெற கோட்டை பொருத்தமாயிருந்தமை.
◆ வர்த்தகப் பொருட்கள் விளையும் இடமாக இருந்தமை.

iv. ◆ 6 ஆம் பராக்கிரமபாகுவின் காலத்தில் சுதந்திரமான ஆட்சியைப் பேணுவதற்கான அரச ஆதரவு.
◆ நாட்டினுள் பிரசித்தி பெற்ற விஜயபாகு பிரிவேனா, பத்மாவதி பிரிவேனா, ஸ்ரீகனானந்த பிரிவேனா போன்ற பல பிரிவேனாக்கள் அமைக்கப்பட்டமை.
◆ பிரிவேனாக்களில் கற்றறிந்த பிக்குகளும் அவர்களது மாணாக்கர் களும் காணப்பட்டனர்.
◆ ஸ்ரீ ராகுல தேரர், வேத்தேவேகிமி வதாகம்தேரர், வரைத்ன தேரா.
◆ முக்கியமான கிரந்தங்கள் எழுதப்பட்டன.
◆ குத்திலய, புதுகுன அங்காரய, சந்தேச காவியம்.
◆ தமிழ் மொழியிலும் நூல்கள் எழுதப்பட்டன.
◆ சரபோதிமாலை, இரகுவம்சம்.
◆ பண்டிதர்கள் காணப்பட்டனர்.

05) i. ◆ கோட்டை - எட்டாம் வீரபராக்கிரமபாகு,
◆ மலையகம் - சேனாசம்மத விக்கிரமபாகு,
◆ யாழ் - பரராஜசேகரன்

ii. ◆ கி.பி. 1505 இல் அலையில் சிக்கி காலித்துறைமுகத்தினை வந்தடைந்தமை.
- கி.பி 1518 இல் கோட்டையில் மன்னனின் ஆதரவுடன் கோட்டையை அமைத்தமை.
- விஜயபாகு கொள்ளையைத் தொடர்ந்து கோட்டை மூன்றாகப் பிளவுபட்டதன் பின்னர் மாயாதுன்னையிடமிருந்து கோட்டையை பாதுகாக்க 1 ஆம் புவனேகபாகு போர்த்துக்கேயரின் உதவியை நாடியமை.
- தர்மபாலனின் ஒப்பந்தப்படி போர்த்துகேயர் கோட்டையின் சட்டப்படியான உரிமையாளரானமை.

iii. ◆ இலங்கை வந்த கத்தோலிக்க மதகுருவான பிரான்சிஸ் கோட்டையின் 7 ஆம் புவனேகபாகுவின் அனுசரணையுடன் கரையோரப் பிரதேசங்களில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பியமை.
- தர்மபால மன்னனும் அவனைத் தொடர்ந்து ஏனையோரும் கத்தோலிக்க மதத்தைத் தழுவியமை.
- தர்மபால மன்னன் மதகுருமாருக்கு சொத்துக்களை வழங்கியமை.
- தேவாலயங்களுக்கண்மையில் பரிஷ் பாடசாலைகளை அமைத்தமை.
- அதன் மூலம் கத்தோலிக்க மதத்தைப் பிரசாரம் செய்தமை.
- கத்தோலிக்க மத விழாக்களை நடத்தியமை.
- சாதாரண மக்களுக்கு மதகுருமார் உயர்ந்த இடம் வழங்கியமை.

iv. ◆ ரோமன் கத்தோலிக்க மதம்,
- சட்டப்படியான விவாக முறை,
- கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகளை நிறுவியமை.
- கட்டடக் கலையில் மாற்றம், பைலா, கப்பிரிஞ்ஞா போன்ற சங்கீத முறைகள் அறிமுகம்.
- போர்த்துக்கேயமொழிச் சொற்கள் கலந்தமை.
- பெயர்கள், உடைகள், உணவுப் பழக்கவழக்கம்.

**06)**

i.
- பிரட்ரிக்நோத், தோமஸ் மெயிட்லன்ட், றொபட் பிறவுன்ரிக் கி.பி. 1815 இல் பிரித்தானியர் மலையகத்தைக் கைப்பற்றிய பின்னர் றொபட் பிறவுன்ரிக்கிற்கும் மலையக பிரதானிகளுக்கும் இடையில் ஒப்பந்தம் செய்தமை.

- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனுக்குப் பின்னர் அவர்களது மனைவியின் சகோதரர் யாரும் மலையக இராச்சியத்திற்கு வருதல் தடை செய்யப்பட்டது.
- மலையகப் பிரதானிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும் எனவும் சம்பிரதாயங்களும், மரபுரிமைகளும் பாதுகாக்கப்படும் எனவும் கூறப்பட்டிருந்தது.
- பௌத்தமதம் பாதுகாக்கப்படும்.
- மலையகப் பிரதேச வழக்குகள் புராதன முறையிலேயே விசாரிக்கப்படும்.
- சித்திரவதைகள், தண்டனைகளைத் தவிர்த்தல்.

iii. ◆ மன்னராட்சியில்லாது நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பட்டது மலையக மக்களுக்கு சிரமமாயிருந்தமை.

- மொழி, சம்பிரதாயங்களை அறிந்திராத பிரித்தானியருக்கு மலையகத்தின் நிர்வாகம் சிரமமாயிருந்தமை.
- 1815 ஒப்பந்தப்படி பிரித்தானியர் நடந்து கொள்ளாமை.
- பிக்குகளினதும், பௌத்தமதத்தினதும் கௌரவம் பாதிக்கப்பட்டமை.
- பிரதானிகளின் வருமான மார்க்கங்கள் இல்லாது போனமை.

iv. ◆ கிளர்ச்சி ஒழுங்குபடுத்தப்படாமை.
- தலைவர்களின் மத்தியில் ஒற்றுமையின்மை.
- மலையகப் பிரதேசத்திற்கு பிரித்தானியர் தீ வைத்தமை.
- கிளர்ச்சித் தலைவர்களைக் கைது செய்து கொலை செய்தமை.

**07)**

i. சந்திரகுப்த மௌரியன், பிந்துசாரன், தர்மஅசோகன்

ii. ◆ தர்ம அசோகனது காலத்தில் 3 ஆவது பௌத்த மாநாடு நடைபெற்றது.
- விகாரைகள் அமைத்தமை.
- பௌத்தமதக் கொள்கைகளை பிரசாரம் செய்தமை.
- தர்மபோதனைகளுக்காக யாத்திரை நிலையங்கள், பிரசாரம் செய்வோரை நியமித்தமை.
- கற்தூண்களில் தர்மபோதனைகளைப் போதித்தமை.
- அண்மையிலுள்ள நாடுகளுக்கும் பௌத்தமதக் கொள்கைகளைப் பரப்பியமை.

iii. ◆ பாரிய நகரங்களை நிர்மாணித்தமை.
- பாரிய கட்டடங்களை அமைத்தமை.
- கற்களையும் சீமெந்து போன்ற பூச்சுக்களையும் பயன்படுத்தியமை.
- நீள, அகலங்களுக்கேற்ப கட்டடங்களை பல்வேறு பகுதிகளுடன் அமைத்தமை.
- கற்தூண்களில் தர்மபோதனைகளை பொறித்தமை.
- அலங்காரமான செதுக்கல்களை அமைத்தமை.

iv. ◆ அசோகமன்னனின் பின்னர் இராச்சியம் பல பிரிவுகளாகப் பிரிந்தமை.
- ஆட்சியாளர்களின் பலவீனம்.
- அரசுரிமைப் போராட்டங்கள்.
- நாட்டின் பொருளாதாரம் நலிவடைந்தமை.
- குஷாணர்களின் படையெடுப்பு.

**08)**

i. மார்ட்டின் லூதர், ஜோன் வைக்ளிப், ஜோன்ஹஸ், இராஸ்மஸ், ஜோன்கல்வின், உல்ரிச் ஸ்வின்ஸ்லி.

ii. ◆ பாப்பரசர் அதிக அதிகாரங்களைக் கொண்டிருந்தமை.
- மதகுருமார் அதிக பணத்தை அவர்களது ஆடம்பரமான வாழ்க்கைக்கு செலவிட்டமை.
- தேவாலயத்தைப் பொருட்கள், சொத்துக்கள் சேர்த்து வைக்குமிடமாக வைத்திருந்தமை.
- அரசர்களைவிட மதகுருமாருக்கு அதிகாரங்கள் அதிகமாகக் காணப்பட்டது.

iii. ◆ கிறிஸ்தவசபை பிளவுபட்டது.
- பாப்பரசரின் அதிகாரம் குறைவடைந்தமை.
- ஐரோப்பாவில் புதிய மதசீர்திருத்தங்கள் ஏற்பட்டன.
- ரோமப்பேரரசின் அதிகாரம் குறைவடைந்தது.

iv. ◆ ரோமன் கத்தோலிக்க மதத்திற்குப் பதிலாக வேறு மதங்கள் பரவியமையால் ஏற்பட்ட மாற்றங்கள் மக்களின் நடவடிக்கைகளில் காணப்பட்டது.
- கிறிஸ்தவ தேவாலயங்களில் மக்களது விருப்பப்படியே செயற்பாடுகள் இடம்பெற்றன.
- நிர்வாகப் பொருளாதாரத் துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன.
- புரட்டஸ்தாந்துமதம் ஐரோப்பா முழுவதும் விரைவாகப் பரவியது.

**09)**

i. ரூசோ, வோல்டேயர், மொன்டெஸ்கியூ

ii. ◆ பிரான்ஸ் முழுவதும் மானியமுறை பரவியமை.
- புராதன மன்னராட்சி பண்புகள் காணப்பட்டன.
- சமூகத்தில் பிரதானிகள், மதகுருமார், சாதாரண மக்கள் என்ற வகையில் பிரிவுகள் காணப்பட்டன.
- அரசைச்சுற்றி பலமான பாதுகாப்பு காணப்பட்டது.
- மன்னர்கள் சுகபோக வாழ்வை அனுபவித்தனர்.
- அரசனுக்கு எதிரானவர்கள் எவ்வித விசாரணையுமின்றி சிறையில் அடைக்கப்பட்டனர்.
- பிற்காலத்தில் மன்னரிடம் காணப்பட்ட அதிகாரங்கள் மத்திய அதிகாரசபைக்கு வழங்கப்பட்டது.
- பிரான்ஸ் முழுவதும் மானியமுறை பரவியது.
- புராதனகால மன்னராட்சியின் பண்புகள் காணப்பட்டன.
- பிரதானிகள், மதகுருமார், சாதாரண மக்கள் எனும் பிரிவுகள் இருந்தன.
- அரசைச்சுற்றிப் பலமான பாதுகாப்பு வலயம் காணப்பட்டது.
- அரசர்கள் சுகபோக வாழ்வை அனுபவித்தனர்.
- பிற்காலத்தில் அரசரது அதிகாரங்கள் குறைந்து அது மத்திய நிர்வாக சபைக்கு வழங்கப்பட்டது.
- பிரான்சிய அரசு ஏகாதிபத்தியப் போக்கினைக் காட்டியது.

iii. ◆ பிரான்சிய விவசாயிகள் பலவந்தப்பட்டார்கள்.
- பெருந்தொகையானோர் அரசனுக்கும், தேவாலயத்திற்கும் வரி செலுத்தினர்.
- பிரதானிகளும், மதகுருமாரும் வரி செலுத்தலில் விலக்களிக்கப் பட்டிருந்தனர்.
- பிரான்சியப் பொருளாதாரம் சீரழிந்திருந்தது.

iv. ◆ சமூகத்தில் சகல மக்களுக்கும் சம உரிமைகள் கிடைத்தன.
- தனிப்பட்ட முறையிலும் குழுவாகவும் நீதி நடவடிக்கைகளில் ஈடுபடமுடிந்தது.
- எவரையும் விசாரணையின்றிக் கைது செய்யவோ சிறையிலடைக்கவோ முடியாது.
- கருத்துக்களை வெளியிடும் உரிமையும் விரும்பிய மதத்தைப் பின்பற்றும் உரிமையும் கிடைத்தது.

**10)**

i. ஜேர்மனி, ஆஸ்திரியா, துருக்கி, இத்தாலி, ஹங்கேரி, பல்கேரியா

ii.

A. ஐக்கிய அமெரிக்கக் குடியரசு - ஜனாதிபதி வூட்ரோவில்சன்.

B. பெரிய பிரித்தானியா - பிரதமர் - லொயிட்ஜோர்ஜ்

C. ஜேர்மனி - 11 ஆம் வில்லியம் கைசர் மன்னன்.

D. இத்தாலி - பிரதமர் ஒலென்டோ.

iii. ◆ ஜேர்மனியின் ஆட்சியாளரான 11 ஆம் கைசர் மன்னன் ஜேர்மனியரைப் பிரபலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டமை.
- ஜேர்மனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முக்கூட்டு நட்பு அணி உருவாக்கம்.
- அதனால் ஏனைய நாடுகளின் சந்தேகத்திற்குள்ளானமை.
- ஜேர்மனியின் ஆக்கிரமிப்புக் கொள்கை.
- பிரான்சிற்கு எதிராக யுத்தம் செய்தமை.
- மத்தியிலிருந்த பெல்ஜியத்தை ஆக்கிரமித்தமை.
- ஐக்கிய அமெரிக்காவும் யுத்தத்தில் ஈடுபட்டது.
- ரஷ்யாவும் ஆக்கிரமிப்புக்கு வழிவகுத்தது.

iv. ◆ உயிர்களும், சொத்துக்களும் ஏராளமாக அழிவடைந்தன.
- நவீன யுத்த உபகரணங்களின் பாவனையால் அழிவுகள் அதிகரித்தன.
- ஜேர்மனியின் ஆதிக்கம் வீழ்ச்சியடைந்தது.
- புதிய இராச்சியங்கள் தோன்றின.
- போலந்து, பின்லாந்து, ரூமேனியா, ரஷ்யாவில் சார் ஆட்சி வீழ்ச்சியடைந்து சோவியத் சமவுடமைக் குடியரசு எனும் நாடு உருவானது.
- சில நகரங்களின் பெயர்கள் மாற்றம் பெற்றன.

***உ+ம் : கொன்ஸ்தாந்திநோபிள் - இஸ்தான்புல் உலக தாபனமாக சர்வதேச சங்கம் உருவானது.***

# பிரச்சினைகளை எதிர்கொள்வது எப்படி?
# பிரதமர் விருந்தில் காங்கிரஸ் ஆலோசனை

(சென்னை)

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் வரும் 21 ஆம் திகதி தொடங்க உள்ளதையடுத்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தலைவர்களுக்கு பிரதமர் மன் மோகன் சிங் விருந்தளிக்கிறார்.




இந்தக் கூட்டத்தொடரில் சில்லறை வர்த்தகத்தில் நேரடி அன்னிய முதலீடு கொண்டு வரும் மத்திய அரசு திட்டம் முக்கிய இடம் பிடிக்கின்றது.

பிரதமர் மன்மோகன் சிங், நேரடி அன்னிய முதலீட்டுத் திட்டம் வருவதால் நாட்டில் வேலை வாய்ப்புகள் உருவாகும் எனக் கூறிவருகிறார்.

ஆனாலும் இது தொடர்பாக வாக்கெடுப்புடன் கூடிய விவாதம் நடத்தக்கோரி இடதுசாரி கட்சிகள் (கம்யூனிஸ்ட்) வலியுறுத்தி வருகின்றன.

அதேபோல், முக்கிய எதிர்க் கட்சியான பா.ஜ.கவும் அதன் கூட்டணி கட்சியான ஐக்கிய ஜனதா தளம் மற்றும் திரிணமுல் காங்கிரசும் வாக்கெடுப்புடன் கூடிய விவாதம் அவசியம் என வலியுறுத்தி நோட்டீஸ் அளித்துள்ளன.

மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளுக்கு, அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு தரும் கட்சிகளிடமும் தங்களுடைய நிலையை எடுத்துக்கூற பிரதமர் மன்மோகன் சிங் முற்பட்டுள்ளார்.

இதன் காரணமாக, ஐக்கிய முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்களுக்கு விருந்தளிக்கிறார்.

அப்போது மத்திய அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் பிரச்சினைகளைக் கிளப்பினால் அதை எப்படி சமாளிப்பது என இந்த விருந்தில் முடிவு செய்யப்பட உள்ளது.

# பா.ஜ.க.வில் இணையவில்லை
# நடிகை நமீதா



(சென்னை)

பாரதிய ஜனதா கட்சியில் இணையவில்லை என்றும் அரசியலில் ஈடுபடும் எண்ணம் தற்போதைக்கு கிடையாது எனவும் நடிகை நமீதா கூறியுள்ளார்.

குஜராத்தை சொந்த மாநிலமாகக் கொண்ட நமிதா, தென்னிந்திய மொழிப்படங்களில் நடித்து வருகிறார்.


தற்போது பட வாய்ப்புகள் சற்றுக் குறைந்துள்ள நிலையில் தனியாக ரியல் எஸ்டேட் என சில வியாபாரங்களில் ஈடுபட்டு வருகிறார். இந்நிலையில் பா.ஜ.க.வில் நமீதா இணைந்ததாகவும் 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்கு, தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடப்போவதாகவும் செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் இதற்கு மறுப்பு தெரிவிக்கும் விதத்தில் நடிகை நமீதா, தற்போது அரசியலில் ஈடுபடவில்லை. தமிழக பாரதீய ஜனதா கட்சியில் சேர்ந்து விட்டதாக வெளியான செய்திகள் தவறானவை.

அக்கட்சியில் சேரும் எந்த திட்டமும் என்னிடம் இல்லை என்றும் வழக்கம் போல் சினிமாவில் நடித்துக் கொண்டு இருக்கிறேன் எனவும் கூறினார்.

# பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி, நான்கு பேர் காயம்

(சென்னை)



உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான காஷ் மீரின் தால் ஏரி அருகே பயங்கரவாதிகள் நேற்று நடத்திய துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலியானார் நான்கு பேர் காயமடைந்தனர்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலம், ஸ்ரீநகரில் உள்ள தால் ஏரி அருகே அரசு சார்பில் நடத்தப்படும் ஹோட்டல் ஒன்றில் நேற்று அத்து மீறி நுழைந்த பயங்கரவாதிகள் கண்மூடித்தனமாக துப்பாக்கி சூடு நடத்தினர்.

இதில் ஹோட்டலில் உள்ள மதுபான ‑பிரிவில் பணியாற்றும் முஷ்டாக் அஹமது என்பவர் உயிரிழந்தார்.

மேலும் 4 தொழிலாளர்கள் காயமடைந்தனர் என்று பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.



டில்லியில் நடைபெற்ற இந்தியா மற்றும் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பங்கேற்ற பாகிஸ்தான் உயரதிகாரிகள் சல்மான் பஷிருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

# பாகிஸ்தானிலிருந்து மீனவர்கள் விடுதலை



(சென்னை)

பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் மீன்பிடித்ததாகக் கைது செய்யப்பட்ட குஜராத் மீனவர்கள் 15 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடித்ததாக அந் நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பாகிஸ்தானின் கராச்சி சிறையில் அடைக்கப் இருந்த நிலையில் கடந்த ஞாயிறன்று விடுதலை செய்யப் பட்டதாக தகவல்கள் வெளியாகின.

இதையடுத்து 9 மாத சிறைத் தண்டனைக்குப் பின்பு விடுதலை செய்யப்பட்டு நேற்று குஜராத் திரும்பினர்.

இவர்கள் அனைவரும் குஜராத் மாநிலத்தின் வீராவல் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




# முன்னாள் பாதுகாப்பு அமைச்சரின் உடல் அரசு மரியாதைகளின்றி அடக்கம்!

(சென்னை)

முன்னாள் மத்திய பாதுகாப்பு அமைச்சர் கே.சி. பந்த் (81) நேற்று முன்தினம் காலமானார். அவரது குடும்பத்தினர், இறுதிச் சடங்குகளை தனிப்பட்ட முறையில் அனுஷடிக்கப் போவதாக விடுத்த வேண்டுகோளை அடுத்து, முன்னாள் மத்திய அமைச்சர்களுக்கு வழங்கப்படும் அரசு மரியாதை வழங்கப்படவில்லை.

பந்த் இறப்பு குறித்து தகவல் அறிந்த பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி, பந்த் வீட்டுக்குச் சென்றார்.



ஆனால் அவர் செல்வதற்கு முன்பே, பந்தின் உடல் எடுத்துச் செல்லப் பட்டு விட்டது.

பாதுகாப்பு அமைச்சராக இருந்த பந்த் மாலைதீவு, இலங்கை உள்ளிட்ட பிரச்சினைகளில் இந்தியாவின் பங்களிப்பை திறம்பட நிர்வகித்தவர். டாமன் பகுதியில் முதல் கடலோர விமானப் பாதுகாப்புத் தளத்தை அமைத்தவர் என்று அந்தோனி தெரிவித்தார்.


பிரதமர் மன்மோகன் சிங், பந்தின் குடும்பத்துக்கு தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

நைனிடாலில் பிறந்த கே.சி பந்த், உத்தரப்பிரதேச முதல்வராக இருந்த கோவிந்த் வல்லப பந்தின் மகன். காங்கிரஸ் கட்சியில் அரசியல் வாழ்வைத் தொடங்கிய கே.சி பந்த், 1998ல் பாரதிய ஜனதாவில் இணைந்தார்.

1962, 1967, 1971, 1989ஆம் ஆண்டுகளில் மக்களவை உறுப்பினராகவும், 1978ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினராகவும் இருந்தார்.

இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரின் அமைச்சரவைகளில் இடம் பெற்ற பந்த், ராஜீவ்காந்தி அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

# செங்கல்பட்டு அகதிகள் மீண்டும் உண்ணாவிரதம்



(சென்னை)

செங்கல்பட்டு சிறப்பு அகதிகள் முகாமில் உள்ள இலங்கைத் தமிழர் 5 பேர் நேற்று முன்தினம் முதல் மீண்டும் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

தங்களை திறந்த வெளி முகாமுக்கு மாற்றுமாறு வலியுறுத்தியே இவர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

# சீனாவில் ஊழல் ஒழிக்கப்படும்; புதிய ஜனாதிபதி சூளுரை



சீனாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்த ஹு ஜிண்டாவோ பதவி விலகினார். அதனைத் தொடர்ந்து, 59 வயதான மூத்த தலைவர் ஜி ஜின்பிங் அக் கட்சியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். சீனாவின் அதிக அதிகாரம் படைத்த இந்த கட்சியின் தலைவரான ஜி ஜின்பிங், சீனாவின் அதிபராக, நிலைக்குழு உறுப்பினர்களுடன் 10 ஆண்டுகளுக்கு சீனாவை வழிநடத்தி செல்வார்.

சீன அதிபராக அடுத்த ஆண்டு மார்ச் மாதம் பதவியேற்க இருக்கும், ஜி ஜின்பிங், பெய்ஜிங் மக்கள் மன்றத்தில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பின் போது கூறியதாவது:-

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அநேக முக்கிய பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறது. குறிபபாக ஊழல், அதிகரித்து வரும் விவகாரத்து போன்ற பிரச்சினைகள் மூத்த அரசு அதிகாரிகள் துணையுடன் சட்டப்படி சரி செய்யப்படும். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு கட்சியில் உள்ள அனைவரும் மிகுந்த கவனத்துடன் செயற்படவேண்டும்.

இதுபற்றிப் பேசுவதற்கு முன்பு, முதலில் நாம் கட்சியின் கொள்கைகளை மதித்து நடக்க வேண்டும். இந்த விசயத்தில் அனைத்து தோழர்களும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வது அவசியம். கட்சியில் உள்ள பிரச்சினைகளை சரி செய்ய கடுமையான விதிமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுக்கத்துடன் நடந்து கொள்ளவேண்டும். மக்களுடன் தொடர்புகளை மேம்படுத்தி அவர்களுடன் கலந்துரையாடுவதைத் தொடர்ந்து பேண வேண்டும்.

சீனாவிற்கே உரித்தான சோசலிசத்தை முன்னோக்கி எடுத்துச் செல்ல தலைமைக்குத் துணையாக இருக்கிறோம் என்பதை கட்சியினர் உறுதிப்படுத்த வேண்டும். என்றார்.

உலகச் செய்திகள்

# ஐரோப்பாவில் 23 நாடுகளில் பொது வேலை நிறுத்தம்

(லண்டன்)

ஒரு காலத்தில் செல்வச் செழிப்பில் மிதந்த ஐரோப்பிய நாடுகள் இப்போது பொருளாதாரச் சரிவில் சிக்கித் தவிக்கின்றன. இதைச் சரிகட்ட வரி அதிகரிப்பு, வேலை பறிப்பு போன்ற நடவடிக்கைகளில் அந்த நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. இதனால் ஏராளமானோர் வேலை இல்லாமல் தவிக்கிறார்கள்.

இதைக் கண்டித்து 23 நாடுகளில் பொது வேலை நிறுத்தம் இடம்பெற்றுள்ளது. 40-க்கும் மேற்பட்ட சங்கங்கள் இதில் பங்கேற்றன. மற்ற நாடுகளில் வேலை நிறுத்தம் அமைதியாக நடந்தது. ஆனால் ஸ்பெயின், போர்த்துக்கல் நாடுகளில் பல இடங்களில் கலவரம் ஏற்பட்டது.

ஸ்பெயினில் மாட்ரிட் நகரில் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் வன்முறை வெடித்தது. அப்போது பொலிஸ்காரர்கள் தாக்கப்பட்டனர். இதனால் நூற்றுக் கணக்கானோரை பொலிஸார் க்கைது செய்தனர்.

கிரீஸ், ஏதென்ஸ் நாடுகளில் சில இடங்களில் மட்டும் மோதல் சம்பவங்கள் நடந்தன. ஐரோப்பிய நாடுகளிலேயே ஸ்பெயினில் தான் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக உள்ளது. அங்கு 25 சதவீதம் பேருக்குவேலை இல்லை. கிரீசில் 23 சதவீதம் பேர் வேலையில்லாமல் உள்ளனர். இந்த எண்ணிக்கை பிரான்சில் 14 சதவீதமாகவும், இத்தாலியில் 10 சதவீதமாகவும், பெல்ஜியத்தில் 5 சதவீதமாகவும் உள்ளன.

# சர்வதேச அளவில் தேடப்படும் தீவிரவாதிகளின் பட்டியல் வெளியீடு



சர்வதேச அளவில் தேடப்படும் தீவிரவாதிகளின் பட்டியலை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

அமெரிக்க புலனாய்வு நிறுவனம் எப்.பி.ஐ. வெளியிட்டுள்ள புது பட்டியலில், அமெரிக்காவின் அலபாமாவில் வசித்த தீவிரவாதி ஓமர் ஷபீக் ஹமாமி என்பவரின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது.

இவர் சோமாலியாவில் பதுங்கியிருந்து அல்ஷபாப் என்ற இயக்கத்தை இயக்கி வருவதாகவும், தீவிரவாதிகளுக்கு பல வகையில் உதவியாக இருப்பதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மேலும் பிலிப்பைன்சில் அமெரிக்கர் ஒருவரை கடந்த 1993 ஆம் ஆண்டு கடத்திய குற்றத்துக்காக, பிலிப்பைன்ஸைச் சேர்ந்த ஒருவரையும் தீவிரவாதிகளின் பட்டியலில் சேர்த்துள்ளது. இவர் உள்ளூர் தீவிரவாத இயக்கத்துக்கு தலைவராகச் செயற்படுவதாகவும் கூறி யுள்ளது.

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஷேக் அமினுல்லா என்பவர் பாகிஸ்தானின் அல்கொய்தா தீவிரவாதிகளுடன் சேர்ந்து சதித திட்டத்தில் ஈடுபடுவ்தாக இவர் பெயரும் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.

எனினும் அமெரிக்காவில் இவர் மீது எந்த குற்ற வழக்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவருடன் சேர்த்து புதுப் பட்டியலில் 32 தீவிரவாதிகளின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

# ஐ.நா ஊழியர்களுக்கு பாதுகாப்பை வழங்க வேண்டும்



உலகின் பல்வேறு நாடுகளில் ஆபத்தான சூழலில் பணிபுரிந்து வரும் ஐ.நா ஊழியர் களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் என ஐ.நா பொதுச்செயலாளர் பான் கி மூன் தெரிவித்துள்ளார்.


உலகின் பல்வேறு நாடுகளில் அமைதிக்காகப் பணிபுரிந்து உயிரிழந்த 29 ஐ.நா ஊழியர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஐ.நா தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற பான் கீ மூன் கூறுகையில், உயிருக்கு எவ்வித ஆபத்து மற்றும் அச்சுறுத்தலும் இன்றி ஐ.நா ஊழியர்கள் பணியாற்றும் சூழலை உலக நாடுகள் ஏற்படுத்த வேண்டும் என்றார்.

கடந்தாண்டு நவம்பர் மாதம் முதல் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரை உலகின் 11 பகுதிகளில் ஐ.நா சார்பில் பணிபுரிந்த பாதுகாப்புப் படையினர், காவல் அலுவலர்கள் உட்பட 29 ஊழியர்கள் விபத்து, இயற்கைப் பேரழிவு, தாக்குதல் உட்பட பல்வேறு காரணங்களால் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோமா நிலையில் இருந்தாலும் சிந்தித்து செயற்படும் மூளை

(லண்டன்)




கோமா நிலையில் இருக்கும் போதும், மயங்கிய நிலையில் உடல் செயலற்று இருக்கும் போதும மூளை சிந்தித்து செயற்படும் திறனை இழந்து விடும் என்றே இதுவரை கருதப்பட்டு வந்தது.

ஆனால் அந்த நிலையிலும் மூளை சிந்தித்துச் செயற்படுவதாக மருத்துவ விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்து உள்ளார். கனடா நாட்டைச் சேர்ந்த ஸ்காட்ரட்லி என்பவர் விபத்தில் சிக்கி 12 ஆண்டுகளாக கோமா நிலையில் இருந்தார். அவர் அவ்வப்போது கண் திறந்தும், கைகளை அசைத்தும் ஏதோ சொல்ல முயற்சிப்பதாகவும் அவரைக் கவனித்து வந்த உறவினர்கள் தெரிவித்தனர்.

இதுபற்றி அறிந்த இங்கிலாந்தை சேர்ந்த பிரபல நரம்பியல் நிபுணர் அட்ரியன் ஓவன் அவரை ஆய்வு செய்தார். ஸ்காட்ரட்லியிடம் அவர் சில கேள்விகளை கேட்டு அதை நவீன ஸ்கேன் மூலம் பரிசோதித்தார். அதில் அவர் கேட்கும், ஒவ்வொரு கேள்விக்கும் ஸ்காட்ரட்லி பதில் அளிப்பது ஸ்கேனில் பதிவாகி இருந்தது. உங்களுக்கு உடல் வலிக்கிறதா? தற்போது கொடுக்கும் சாப்பாடு பிடிக்கிறதா? போன்ற கேள்விக்கு மூளை சிந்தித்து பதில் அளித்தது. மேலும் தன்னைச் சுற்றி நடக்கும் வி'யங்களையும், இருக்கும் சூழ்நிலைகளையும் மூளை புரிந்து கொண்டது.

இதேபோல கனடா நாட்டைச் சேர்ந்த ஸ்டீவன் கிரகாம் என்பவர் பல ஆண்டுகளாக கோமாவில் இருந்தார். அவரைப் பரிசோதித்த போதும் மூளை சிந்தித்து பதில் அளித்தது. இதன் மூலம் கோமா நிலையில் இருந்தாலும் மூளை தனது அனைத்துப் பணிகளையும் செய்வதாக அட்ரியன் கூறுகிறார்.

# சிறுநீரில் மின்சாரம்; நைஜீரிய மாணவிகளின் சாதனை



(லண்டன்)

வட நைஜீரியா நாட்டில் உள்ள லாகோஸ் நகரில், அரிய கண்டுபிடிப்புகளின் கண்காட்சி நடைபெற்றது.

'மேக்கர் பெய்ர்' நடத்திய இந்தக் கண்காட்சியில், 4 நைஜீரிய மாணவிகள் கண்டுபிடித்துள்ள 1 லிட்டர் சிறுநீரில் 6 மணி நேரத்திற்கான மின்சாரத்தை தயாரிக்கும் ஜெனரேட்டர் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

இவர்கள் கண்டுபிடித்துள்ள எலெக்ரோலைட்டிக் செல்லினுள் சிறுநீரை ஊற்றினால், அதிலிருந்து நைட்ரஜின், தண்ணீர், ஹைட்ரஜின் ஆகியவற்றை இந்த கருவி தனித்தனியாகப் பிரித்து விடுகின்றது.

இதிலிருந்து எடுக்கப்படும் ஹைட்ரஜின், வாட்டர் பில்டரில் செலுத்தி தூய்மைப்படுத்தப் படுகிறது. பின்னர் காஸ் சிலிண்டருக்குள் தூய்மையான ஹைட்ரஜன் அனுப்பப்படுகிறது.

இந்த காஸ் சிலிண்டர், திரவ போரக்ஸ் (வெண்காரம்) நிரப்பப்பட்ட மற்றொரு சிலிண்டருக்குள் ஹைட்ரஜனை அனுப்புகிறது. இதன் மூலம் ஹைட்ரஜனில் உள்ள ஈரப்பதம் உரிஞ்சப் படுகிறது.பின்னர், ஜெனரேட்டருக்குள் திணிக்கப்படும் உலர்ந்த ஹைட்ரஜின் வாயு, 6 மணி நேரத்திற்கு தேவையான மின்சாரத்தை தயாரிக்கும் எரிபொருளாக செயலாற்றுகின்றது.இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்ட மாணவிகள் அனைவரும் 15 வயதிற்கும் குறைவானவர்கள். நைஜீரியாவின் பொருளாதாரம் வளர்சசியடைந்து வந்த போதிலும், 162 மில்லியன் நைஜீரிய மக்கள் மின்சார இணைப்புகள் இன்றி வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டன் பெண்கள் திருமணத்தில் நம்பிக்கை இழப்பு

ஆண்களை விட பெண்களுக்கு, திருமண பந்தத்தில் நம்பிக்கை குறைவாக இருப்பது, பிரிட்டனில் நடந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.பொதுவாக, திருமண பந்தத்தில் பெண்களுக்கு தான் அதிக நம்பிக்கை இருக்கும் என்றாலும், தற்போது அந்த நிலை மாறி வருகிறது. இதுகுறித்து, பிரிட்டனில் சமீபத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.பல்வேறு நகரங்களில், 21 வயதுக்குட்பட்ட, 1,200 பெண்களிடமும், 600 ஆண்களிடமும் நடத்தப்பட்ட ஆய்வில், ஐந்தில் ஒரு பெண் மட்டுமே திருமணம் செய்து கொள்வதை முக்கியமாகவும், மூன்றில் ஒரு பெண் மட்டுமே, திருமணமான தம்பதியரே நல்ல பெற்றோர்களாக இருப்பர் என்றும் கருதுவதாகக் கூறியுள்ளனர். ஆண்களில், 56 சதவீதம் பேர், திருமணத்தில் நம்பிக்கை தெரிவித்துள்ள நிலையில்,46 சதவீதம் பெண்கள் மட்டுமே திருமண பந்தத்தில் நம்பிக்கை உள்ளதாக தெரிவித்துள்ளனர். திருமண பந்தத்தின் மேல், தங்களுக்கு மதிப்பு இருந்தாலும், அதை வெற்றியின் அடையாளமாகப் பார்ப்பதில்லை" என, பெண்கள் கருத்து தெரிவித்துள்ளனர். ஐந்தில், மூன்று பெண்கள், தன்னம்பிக்கையோடும் சுதந்திரமாகவும் இருப்பதையே வெற்றி என்று கருதுகின்றனர்.

# வாழ்வாதார உதவித் திட்டம் வடமராட்சி கிழக்கில் அமுல்

(வடமராட்சி)

சுவிஸ் லேபர் அசிஸ்ரன் (SAH) நிறுவனத்தால் வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 5 கிராமங்க்ளில் வாழ்வாதார உதவிகளை மேற்கொள்ளவுள்ளது.

அந்த வகையில் உடுத்துறை, வத்திராயன், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, முள்ளியான் போன்ற கிராமங்களில் தமது வேலைத்திட்டத்திற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் நேற்று வத்திராயன் கிராமத்திற்கான கலந்துரையாடல் வத்திராயன் கிராம அலுவலர் விமலேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

இதில் SAH நிறுவனத்தின் மருதங்கேணிப் பிரதேசத்திற்கான கள உத்தியோகத்தர் தில்பன் கருத்துத் தெரிவித்தார்.

இதில் பயனாளிகள் எப்படித் தெரிவு செய்யப்படுவது, பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற வாழ்வாதார உதவிகள், உதவிகளைக் கொண்டு அவர்கள் எவ்வாறு முன்னேறுவது போன்ற விடயங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டதுடன் இதில் இம் மக்களில் இருந்து 8 பேர்கொண்ட குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது.

இக்குழுவானது வத்திராயன் கிராம மட்ட அமைப்புக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டது. இதில் கடற்றொழிலாளர் சங்கத்தில் இருந்து 2 பேரும் கமக்கார அமைப்பிலிருந்து 2 பேரும் கிராம முன்னேற்றச் சங்கத்திலிருந்து 2 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர். இக்குழுவுடன் நிறுவனம், பயனாளிகளைத் தெரிவு செய்து 7 நாட்களுக்கு மக்கள் பார்வைக்கு விளம்பரப் பலகையில் விபரங்களைக் காட்சிப்படுத்தவுள்ளது.

இக்குழுவில் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் தாம் வைக்கும் முறைப்பாட்டுப் பெட்டியில் மக்கள் கருத்தை எழுத்து மூலம் தெரிவித்துப் பெட்டியில் போட வேண்டும் எனத் தெரிவித்தார்.

அதன்படி கடற்றொழில் செய்பவர்களுக்கு ஒரு இலட்சம பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களும் மற்றைய தொழில்களைச் செய்பவர்களுக்கு நாற்பது ஆயிரம் ரூபா பணமும் அல்லது அதற்கான உபகரணங்களும் வழங்குவது என்றும் தெரிவித்தனர்.

இப்பயனாளிகள் தெரிவு இன்னும் ஒருசில கிழமை களில் இடம்பெறும் என்றும் இத் திட்டத்தில் இதுவரை எவ்வித வாழ்வாதார உதவிகளையும் பெறாதவர்கள் முன்னுரிமைப் படுத்துவதுடன் அதன் பின்னர் குறைவான வாழ்வாதார உதவிகளைப் பெறுபவர்கள் அடுத்த கட்டமாகவும் உள்வாங்கப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

இத்திட்டமானது போரினால் பாதிக்கப்பட்ட வடபகுதியில் SAH நிறுவனம் முதல் கட்டமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் யாழ். மாவட்டத்தில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலும் தமது திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் இந்நிறுவனத்திற்கு இலங்கையில் காரியாலயங்கள் 2 உள்ளது எனவும் தலைமைக் காரியாலயம் கொழும்பிலும் வடமாகாணத் திற்கான காரியாலயம் கிளிநொச்சியிலும் அமைந்துள்ளது என்று நிறுவனத்திற்குப் பொறுப்பான தீபன் தெரிவித்தார். (38)



பிரான்ஸ் திருமறைக் கலாமன்றத்தினரால் அங்கவீனர்களுக்கு உதவும் முகமாக அன்பளிப்பு செய்யப்பட்ட ஒரு தொகை நிதியை மன்ற இயக்குனர் அருள்திரு நீ.மரியசேவியர் அடிகளாரால் ஜெய்ப்பூர் ஸ்தாபன நிர்வாகிகளிடம் வழங்குவதைக் காணலாம். (27)

# இலங்கை விவகாரங்களில் உள்ளக மீளாய்வு அறிக்கை

## பயன்படுத்தப்படும் என்கிறது ஐ.நா.

இலங்கை விவகாரங்களின் போது உள்ளக மீளாய்வு அறிக்கை பயன்படுத்திக்கொள்ளப்படும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகள் அமைப்பு பொதுமக்களை பாதுகாக்கும் கடமையை உரிய முறையில் மேற்கொள்ளத் தவறியதாகக் குற்றம் சுமத்தி உள்ளக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைத் தகவல்களைப் பயன்படுத்தி இலங்கை தொடர்பான விடயங்களில் காத்திரமான பங்களிப்பினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

உள்ளக மீளாய்வு அறிக்கை யுத்த வலயங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கடமைகளை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். உள்ளக மீளாய்வு அறிக்கையில் செய்யப்பட்டுள்ள பரிந்துரைகள் காத்திரமான முறையில் அமுல்படுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அறநெறிப் பாடசாலை நாளை திறப்புவிழா

(திருநெல்வேலி)

கொக்குவிலில் யாழ். விஷன் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலைத் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் கிழக்கு கோணாவளை வீதியில் காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

முன்னாள் மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ம.சுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ கு.குமாரக் குருக்கள் வாழ்த்துரையையும் வழங்கவுள்ளார்கள்.

கௌரவ விருந்தினராக இந்து கலாசாரம் இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மாணிக்கராஜா சர்மா அனந்தலட்சுமி கலந்துகொள்வார். பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள கிருஷ்ணர் சிலையை நல்லை ஆதின முதல்வர் திரைநீக்கம் செய்துவைப்பார்.

இப் பாடசாலையில் யோகாசன வகுப்புக்கள், பண்ணிசை வகுப்புக்கள், வயலின், மிருதங்கம், வாய்ப்பாட்டு, நடனம் போனறவை கலைதேர்ந்த நிபுணர்களால் இலவசமாகப் பயிற்றுவிக்கப்படவுள்ளது. யாழ். விஷன் இசை ஆசிரியக் கலைஞர்களின் இன்னிசை விருந்தும் இடம பெறும். (137)

# நானூறு பணிப்பெண்கள் தடுத்துவைப்பு

சவுதி அரேபிய எஜமான்களின் சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில் தப்பிச் சென்ற இலங்கைப் பணிப்பெண்கள் 400பேர் ரியாத் நகரின் உலெய்யா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

உறுதியளித்த சம்பளம் வழங்கப்படாமை, எஜமான்களின் பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளாகின்றமை மற்றும் சித்திரவதைகள் காரணமாக இவர்கள் தப்பிச்சென்ற நிலையிலேயே அந்நாட்டு அதிகாரிகளால் மேற்படி முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் என்று தூதரத் தகவல்கள் தெரிவிக்கின்றன

# நல்லூரில் வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 56 வீதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீதி அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருவதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நல்லூர் பிரதேச சபை எல்லைப்பரப்பில் 720 தெரு மின் விளக்குகள் பொருததப்பட்டு ஒளியூட்டப்பட்டிருப்பதாகவும் மேலும் 350 வரையான இத்தகைய மின் குமிழ்கள் பொருத்தப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும தெரிவித்துள்ளனர். நல்லூர் பிரதேச சபை பதவி ஏற்று ஒருவருடம் கழிந்திருக்கும் நிலையில் அந்தப் பிரதேச சபையின் அபிவிருத்தித் திட்டங்கள் என்ன நிலையில் இருக்கிறது என்பது குறித்து பதிலளிக்கையிலேயே நல்லூர் பிரதேச சபைத் தலைவர் இதனைத் தெரிவித்தார.(பா)

### ஜனாதிபதியை...

இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களைப் பார்வையிடவுள்ளதுடன் நாட்டின் முன்னேற்றத்திற்கு இந்த அபிவிருத்தி நிறுவனம் எவ்வாறு கூடுதலான ஒத்துழைப்புகளை வழங்கலாம் என்பது தொடர்பிலும் ஆராயவுள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் உலக வங்கிக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்துவது தொடர்பில் இவர் தனது விஜயத்தின் போது முக்கிய கவனம் செலுத்தவுவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### தீவிரமடையும்...

பட்டுள்ளனர். இவர்களுடன் இந்த மாதம் இதுவரை டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட 44 பேர் இவ் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அந்தப் பிரிவினர் தெரிவித்தனர். மேலும் இவ்வருடத்தில் டெங்கு நோயின் தொற்றிற்கு இலக்காகி சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை 935 ஆக அதிகரித்துள்ளது. (பா)

### இ.போ.ச. ஊழியர்கள்...

தனியார் பஸ்களில் பெரும் நெருசல்களுக்கு இடையே பயணிக்க வேண்டி ஏற்பட்டது. வீதிகளில் அதிகளவிலான பயனாளிகள் பயணிப்பதற்காகக் கூட்டம் கூட்டமாகக் காத்திருந்தனர். இ.பொ.ச. பஸ்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டமையினால் தனியார் பஸ்களில் சனக்கூட்டம் அதிகமாகக் காணப்பட்டது. அத்துடன் சகல மினிபஸ்களிலும் அதிகளவிலான பயணிகள் ஏற்றப்பட்டு நெரிசலாகக் காணப்பட்டனர். தினமும் பயணிகளை ஏற்றுவதில் இ.போ.ச. பஸ்களுடன் வீதிகளில் போட்டிபோட்டு ஓடும் மினி பஸ்கள் நெரிந்து அடைக் கப்பட்டு ஏற்றப்பட்ட பயணிகளுடன் சீரவகாசமாகப் பயணித்ததையும் பார்க்க முடிந்தது. (137)

### யாழ். வருகிறார்...

யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி கலந்துகொர்ண்டு மீள்குடியேறிய கடற்றொழிலாளர்களுக்கான ஜப்பானிய அரசின் உதவித்திட்டங்களை அதிகரிக்குமாறு கோரிக்கை ஒன்றையும் முன்வைக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது. இந்நிகழ்வில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பயனாளிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.(பா)

### பணியாளர்களை...

2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகள் அமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பில் மீளாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையில் ஐக்கிய நாடுகள் அமைப்பு பொதுமக்களைப் பாதுகாக்கத் தவறியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த நிலையிலேயே சில தகவல்கள் உள்ளகத் தேவைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டன. எனவே அவற்றை பகிரங்கப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

உள்ளக அறிக்கைகளின் சகல விடயங்களையும் பகிரங்கப்படுத்துவது பொருத்தமான தீர்மானமாக அமையாது சில தகவல்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பணியாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை பகிரங்கப்படுத்துவது பொருத்தமாகது.

பக்கச்சார்பற்ற வகையிலும், ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலும் இந்த அறிக்கையை பகிரங்கப்படுத்த வேண்டும் என்பதில் ஐக்கிய நாடுகள் அமைப்பு கூடுதல் சிரத்தை எடுத்துக்கொண்டதாகவும் மெல்கொரா தெரிவித்துள்ளார்.

### பக்கச் சார்பற்ற...

இலங்கையின் இறுதி யுத்தம் தொடர்பில் சார்ள்ஸ் பற்றி தயாரித்த உள்ளக அறிக்கை, இலங்கையில் மனிதாபிமானத்துக்கு எதிரான யுத்த குற்றங்கள் இடம் பெற்றுள்ளன என்பதை உறுதிப்படுத்துகிறது.


இந்த நிலையில் பக்கச் சார்பற்ற விதத்தில் இலங்கையின் இறுதி யுத்தம் தொடர்பிலும், மனித உரிமைகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

### பரிந்துரைகள்...

புத்தி ஜீவிகள், சட்டத்தரணிகள், ஊடக வியலாளர்கள் கருததுக்களை வெளியிட்டுள்ளதுடன், அந்த திருத்தச் சட்டம் எதிர்கால ஈழ நாட்டுக்கு அடித்தளமாக அமையும் என அவர்கள் அனைவரும் சுட்டிக்காட்டியுள்ளனர் எனவும் மனுதாரர் கூறியுள்ளார்.

மனு தொடர்பில் வாதங்கள் மூலம் மேலும் கருத்துக்களை முன்வைப்பதற்காக எதிர்வரும் 30 ஆம் திகதி நீதிமன்றம் மனுவை விசாரணைக்கு எடுத்து கொள்ளவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# நீதியரசருக்கு எதிரான தீர்மானம் பொதுநலவாய நாடுகள் கவனம்



பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து பொதுநலவாய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

• நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் கவனிக்கப்பட்டு வருவதாக பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை பாதுகாக்க வேண்டும் என்பதில் பொதுநலவாய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் ஜனநாயகப் பொறிமுறைமையை வலுப்படுத்த நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத் தன்மை முக்கியமானது என பொதுநலவாய நாடுகள் அமைப்பு கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

அனைத்து உறுப்பு நாடுகளும் ஜனநாயகத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சிறைச்சாலைகளில் சோதனை உதவிகளின்றி நடத்தப்படும்

சிறைச்சாலைகள் அடுத்த வருடம் முதல் வேறு பிரிவினரின் உதவிகள் இன்றி சோதனைக்கு உட்படுத்தப்படுமென சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. ஆயினும், தேவைப்படும் பட்சத்தில் வேறு பிரிவினரின் பாதுகாப்பை பெற்றுக்கொள்வதற்கான தேவை ஏற்படக்கூடும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பி.டபிள்யூ.கொடிப்பிலி தெரிவித்தார்.

சோதனை நடவடிக்கைகளுக்காக 100 உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். தற்போது அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவில் தற்போது 60 உத்தியோகத்தர்கள் பணியாற்றுவதாகவும் அடுத்த வருடம் டிசம்பர் மாதமளவில் 160 புலனாய்வு உத்தியோகத்தர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 500 மில்லியன் பான்பராக் சுங்கப் பிரிவினரால் மீட்பு



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட 500 மில்லியன் ரூபா பெறுமதியான பான் பராக் வகை பாக்குகளை சுங்கப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து தடை செய்யப்பட்ட பான் பராக் வகை பாக்குகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

எட்டுக் கொள்கலன்களில் இந்த வகை பாக்குகள் மீட்கப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்தவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்யும் போர்வையில் இந்தப் பாக்கு வகைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

# சம்பூர் பாதுகாப்பு வலயம் இரத்து விளக்கமளிக்க அரசுக்கு உத்தரவு

சம்பூர் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பில் அரசாங்கம் தனது விளக்கத்தை அளிக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிரானி பண்டாரநாயக்க தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழு நேற்றுமுன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

2007ஆம் ஆண்டு முதல் சம்பூர் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வசிக்கும் மக்கள் சிலரினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 17ஆம் திகதி இந்த மனுவை பரிசீலிப்பது என்று தீர்மானிக்கப்பட்டதுடன் அன்றைய தினம் அரசாங்கம் தனது விளக்கத்தை அளிக்க வேண்டும் எனவும் அரசுதரப்பு சட்டத்தரணிக்கு கூறப்பட்டுள்ளது.

# புதிய பாடப்புத்தகங்கள் டிசம்பர் 6 இல் விநியோகம்

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டின் பாடப் புத்தகங்களுக்காக அரசாங்கம் 2400 மில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் திஸ்ஸ ஹேவாவிதாரன தெரிவித்தார்.

இம்முறை 37 மில்லியன் பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன. 404 புதிய புத்தகங்களும் அச்சிடப்பட்டன.

41 இலட்சம் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களை வழங்கும் உத்யோகபூர்வ நிகழ்வு டிசம்பர் 6 ஆம் திகதி கண்டி தர்மராஜ கல்லூரியில் நடைபெறும்.

437 வகையான புத்தகங்கள் 2013 இல் விநியோகிக்கப்படும். 23 வகையான நூல்கள் ஏற்கனவே அச்சாகியுள்ளன என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

41 இலட்சம் மாணவர்களுக்காக 370 இலட்சம் புத்தகங்களை விநியோகிக்க வேண்டியுள்ளது. சகல மாணவர்களுக்கும் புதிய புத்தகம் ஒன்றை வழங்குவது அரசின் கொள்கை என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

# தீர்வையற்ற வாகனங்களின் நிபந்தனையில் தளர்வு

அரசாங்க ஊழியர்கள் பெற்றுக்கொண்ட தீர்வையற்ற வாகனங்களுக்கான உத்தரவுப் பத்திரத்தை கைமாற்ற முடியாத வகையில் விதிக்கப்பட்டிருந்த நிபந்தனை தளர்த்தப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனை நேற்று முதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் தளர்த்தப்படுவதாக சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நெவில் குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பிலான அறிவுறுத்தல் நிதி அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

அரச ஊழியர்கள் தீர்வையின்றி கொள்வனவு செய்கின்ற புதிய மற்றும் பழைய வாகனங்களுக்கான உத்தரவுப் பத்திரத்தை மூன்று வருடங்களுக்கு கைமாற்ற முடியாத வகையில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அவுஸ்ரேலியா சென்ற படகில் ஆண் ஒருவரது சடலம் மீட்பு

(சிட்னி)

அவுஸ்ரேலிய கிறிஸ்மஸ் தீவை சென்றடைந்த இலங்கையரை உள்ளடக்கிய படகிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் குறித்த படகு அவுஸ்ரேலியாவின் கிறிஸ்மஸ் தீவை சென்றடைந்தது.

இதில் 62 பேர் பயணித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அகதிகள் அனைவரும் சுகாதாரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்த நிலையில் சடலம் குறித்த விசாரணைகளை கிறிஸ்மஸ் தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொன்சேகாவுடன் இணைந்து சிறைக்கு செல்லத் தயார்

## என்கிறார் கெட்டகொட எம்.பி

(கொழும்பு)


ஜனநாயகக் கட்சியிலிருந்த விஷக் கிருமிகள் அகன்றதன் பின்னர் கட்சியினால் சரியான தொரு பாதையில் பயணிக்க முடிகிறது என்று அக்கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுபபினருமான ஜயந்த கெட்டகொட தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் சரத் பொன்சேகாவை ஒருபோதும் கைவிடப்போவதில்லை என்றும் அவருடன் இணைந்து' சிறைவாசம் அனுபவிக்கவும் தான் தயாராக உள்ளதாகவும் கெட்டகொட எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான டிரான் அலஸ் மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் அண்மையில் அக்கட்சியிலிருந்து விலகியதுடன் அவ்விருவரும் பொன்சேகாவுக்கு தனித்தனியாக கடிதங்களையும் அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதங்களில், அவரது விடுதலைக்காக தாம் இருவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை குறித்தும் தெளிவுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சப்புகஸ்கந்தவில் வாயுக்கசிவு இருவர் பலி, 9 பேர் பாதிப்பு



(கொழும்பு)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட வாயுக் கசிவினால் இருவர் உயிரிழந்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட 9 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாயு சேமிப்பில் ஈடுபட்ட போதே இக்கசிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கும்போதே உயிரிழந்துள்ளதாக தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜெயசிங்க தெரிவித்தார்.

இதேவேளை பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளிக்காயங்கள் இல்லையென்றும் நச்சு.வாயுவை சுவாசித்ததனால் இவர்கள் பாதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அதில் இருவர் அவசர' சிகிச்சைப்பிரிவிலும் நால்வர் விபத்து சேவை பிரிவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களில் ஒருவரின் சடலம் கிரிபத்கொட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றத் தெரிவுக்குழு; நிதானமான கருத்து வேண்டும்

## சபாநாயகர் தெரிவிப்பு


(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு குறித்து நிதானமாக கருத்து வெளியிட வேண்டுமென சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க வெளியிட்ட கருத்து தொடர்பில், ஆளும் கட்சியின் பிரதம கொறடா கருத்து வெளியிட்டிருந்தார். இந்த சம்பாசனை தொடர்பிலேயே சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

கட்சித் தலைவர்கள் கூட்டங்களின் போது பேசப்படும் விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு கருத்து வெளியிடும் தரப்பினரை கூட்டங்களுக்கு அனுமதிப்பது பற்றி மீள்பரிசீலனை செய்ய நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பிரதம நீதியரசர் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டதாக அரச ஊடகங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரிவித்திருந்தார். இந்த ஊடக நிறுவனங்களின் பிரதானிகள் அழைக்கப்பட்டு விளக்கம் கோரப்படும் என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.



இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.